வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 25.07.2022 திங்கட்கிழமை | இதழ் : 231 | பக்கங்கள் : 16

# யாழ்ப்பாணத்தில் பஸ் சேவை இன்று முற்றாக பாதிக்கப்படும்!

- இ. போ. சவினர் இன்றும் புறக்கணிப்பு
- தனியார் பஸ் சேவையும் இடம்பெறாது

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று போக்குவரத்து சேவை முற்றாகப் பாதிக்கப்படும். இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலையினர் இன்றும் தமது பணிப் புறக்கணிப்பு தொடரும் என்று அறிவித்துள்ளனர். இதேசமயம், யாழ். மாவட்ட தனியார் பஸ்களின் உள்ளூர் - வெளியூர் சேவைகள் இன்றும் இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இ. போ. ச. யாழ். சாலையை சேர்ந்த கொழும்புக்கான சேவையில் ஈடுபட்டிருந்த சாரதி, நடத்துநர் மீது, கடந்த வெள்ளிக் கிழமை கலகமுவை சாலை ஊழியர்கள் தலாதகம 15

# வரவு - செலவுத் திட்டம் ஓகஸ்ட் மாத இறுதியில்

கொழும்பு, ஜூலை 25

பாராளுமன்றத்தில் இந்த மாதம் தாக்கல் செய்யப்படவிருந்த இடைக்கால வரவு - செலவுத் திட்டம் ஓகஸ்ட் மாத இறுதியில் சமர்ப்பிக்கப்படும்.

புதிய வரவு-செலவுத் திட்டம் மக்களுக்கும் குறிப்பாக வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கும் பல நிவாரணங்களை வழங்கும் என்று நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய 15

# போர் குற்றவாளி கோட்டாபயவை சிங்கப்பூர் கைது செய்யவேண்டும்!

## சட்டமா அதிபரிடம் சட்டத்தரணிகள் மனு

**சிங்கப்பூர், ஜூலை 25**

**மக்களின் எதிர்ப்பால் நாட்டை விட்டு தப்பி ஓடிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை போர்க் குற்றங்களுக்காகக் கைது செய்ய வேண்டும் என்று சிங்கப்பூர் சட்ட மா அதிபரிடம் குற்ற முறைப்பாடு ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.**

தென்னாபிரிக்காவின் மனித உரிமைகள் சட்டத்தரணி யஸ்மின் சூக்கா தலைமையிலான, சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் 15



# ரணிலை சந்திக்கிறார் விக்னேஸ்வரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் சி. வி. விக்னேஸ்வரன் எம். பி. விரைவில் சந்தித்துப் பேசவுள்ளார்.

ஜனாதிபதி தெரிவின்போது, ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக விக்னேஸ்வரன் எம். பி. பகிரங்கமாக அறிவித்தார். ரணிலை ஆதரிப்பதற்காக அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட 15

# நாடு திரும்புகிறார் கோட்டாபய ராஜபக்ஷ

கொழும்பு, ஜூலை 25

ஓகஸ்ட் அல்லது செப்ரெம்பரில் முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு மீண்டும் திரும்புவார் என்று அறிய வருகின்றது.

தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த மாத இறுதியில் சவூதி அரேபியா செல்லவுள்ளார். ஓகஸ்ட் மாத கடைசி வாரம் அல்லது செப்ரெம்பர் மாத தொடக்க வாரத்தில் அவர் மீண்டும் நாடு திரும்புவார் என்று அவருக்கு நெருக்க மான வட்டாரங்கள் தெரிவித்தன.

# நயினாதீவில் நிலைதவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு

## மருத்துவமனையின் அலட்சியம் காரணமா?

யாழ்ப்பாணம், ஜூலை 25

நயினாதீவில் நிலைதவறி வீழ்ந்து தலையில் படுகாயமடைந்த ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் செல்வகுமார் (வயது-42) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

காயமடைந்தவருக்கு உரிய சிகிச்சையளிக்க 15

# கறுப்பு ஜூலை கொடூரங்களை நினைவுகூர்ந்த கனடா பிரதமர்!

ஒட்டாவா, ஜூலை 25

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை கொடூரமான வன்முறைகளில் தங்கள் உயிர்கள், உடைமைகளை இழந்த மற்றும் இடம்பெயர்ந்தவர்களை நினைவு கூருகிறோம் என கறுப்பு ஜூலை 39ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெளியான அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நாடு முழுவதும் பல தசாப்தங்களாக நீடித்த அமைதியின்மை மற்றும் பதற்றங்களைத் தொடர்ந்து, கொழும்பில் தமிழர் படுகொலைகள் இடம்பெற்றன. கறுப்பு ஜூலை என்று அழைக்கப்படும் இந்த கொடிய நிகழ்வுகள் 26 ஆண்டுகள் நீடித்த ஆயுத மோதலைத் தூண்டியது. இது பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்கக் காரணமா 15

# எனக்கு எதிராக செயல்படுகிறீர்களா? இந்தியாவை நேரடியாக கேட்ட ரணில்!

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதி தேர்தலில் தனக்கு எதிராக இந்தியா செயல்பட்டதா என்று தொலைபேசி வாயிலாக ரணில் விக்கிரமசிங்க கேட்டறிந்தார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ரணில் மீது இந்தியா கோபத்தில் இருக்கிறது என்றும், ரணிலால் இந்தியாவுக்கு சிக்கல் நிலைமை ஏற்பட்டதாகவும் தகவல்கள் பரவின. இந்த விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் கடுமையாகப் பாதித்தது.

ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியாக சில கடினமான முடிவுகளை எடுக்கும்போது, அந்த முடிவுகளின் பின்னணியில் இந்தியா இருப்பதுதான் 15

# சர்வகட்சி அரசு அமைப்பதற்கு 12 பேருக்கு அமைச்சு பதவிகள்!

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் அமைக்கப்பட்டுவரும் அமைச்சரவையில் மேலும் 12 பேரை இணைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களை ஒவ்வொரு கட்சியிலிருந்தும் தெரிவு செய்து அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க முடிவு எட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சுக்களை கட்சிகளுக்கு இடையில் பகிர்ந்தளிப்பதன் ஊடாக சர்வகட்சிகளின் பங்களிப்புடன் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்துள்ளதாக தெரியவந்துள்ளது.

## இப்படியும் நடக்கிறது...!

*அந்த வாசகர் பற்றி முன்னரும் ஒருதடவை குறிப்பிட்டிருந்தேன். நேற்று முன்தினம் அவரிடமிருந்து மீண்டும் ஒரு மின்னஞ்சல் வந்திருந்தது. ஆங்கிலத்தில் அவர் எழுதியிருந்த அந்தக் குறிப்பில், ஜனாதிபதி தேர்தலின்போது சம்பந்தனும் சுமந்திரனும் தவறுசெய்தது பிழையானதுதான். ஆனால், நீங்கள் சந்தர்ப்பத்தை பார்த்து அவர்களை கண்டிக்கின்றீர்கள். ஆனால், மற்றைய எம்.பிக்கள் தவறு செய்கின்றபோது கண்டிப்பதில்லை என்பதே அவரின் கவலை. அவர் ஆங்கிலத்தில் அனுப்பியிருந்த அந்த கண்டனத்தை முதலில் அப்படியே வாசகர்களுடன் பகிந்துகொண்ட பின்னர் அவருக்கு பதில் சொல்வதுதான் பொருத்தமானதாக இருக்கும்.*

'ஈழநாட்டின் இன்றைய ஆசிரிய தலையங்கத்தைப் படித்தேன். பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தெரிவில் எவ்வாறு வாக்களிப்பது என்பது தொடர்பில் சுமந்திரனும் சம்பந்தனும் தீர்மானத்தை எடுப்பதில் கடைப்பிடித்த விதத்தை நீங்கள் மிகச் சரியாகவே கண்டனம் செய்திருக்கிறீர்கள். அந்த தீர்மானம் சரியாகவோ தவறாகவோ இருக்க லாம். அது வேறு விடயம். ஆனால், அந்த போட்டி, ராஜபக்ஷக்களால் அவர்களின் சொந்தப் பாதுகாப்பு கருதி பணத்தைப் பயன்படுத்தி சூழ்ச்சித்தனமாக கையாளப்பட்டது.

'ராஜபக்ஷ அன்ட் கோ'வைப் பொறுத்தவரை, சகலவிதமான ஊழல் மற்றும் கொலை வழக்குகளில் இருந்து தப்புவதற்கு ரணில், அவர்களின் மிகச்சிறந்த காப்புறுதி. ஆனால், குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் மத்தியில் வஞ்சகத்தனமான பேரத்தில் ஈடுபட்டவர்கள் இருந்த பின்புலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களை நம்பவைப்பதற்கு சம்பந்தனும் சுமந்திரனும் இந்தியாவை அதற்குள் இழுத்தது தவறாகும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரான மாவை சேனாதிராசாவையும் உள்ளடக்கியிருக்கும் இந்த குழு, நல்லாட்சி அரசாங்க காலத்தில் ரணிலால் ஏமாற்றப்பட்டபோதிலும்கூட அவருடன் சேர்ந்து அந்தரங்கமாக செயல்படுகிறது.

மற்றையவர்களுடன் (அவர்களால் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பதைத் தவிர மற்றும்படி பங்களிப்பு செய்வதற்கு மூளை இல்லை என்றபோதிலும்கூட) கலந்தாலோசிக்காமல் குறிப்பிட்ட சில ஒரு தலைப்பட்சமான தீர்மானங்களை சுமந்திரன் எடுப்பது முற்றிலும் தவறாகும். அவரின் அந்த போக்கு எந்தவிதமான தயக்கமும் இன்றி கண்டிக்கப்பட வேண்டியதாகும். அவரைக் கண்டனம் செய்வதற்கு சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்து காத்திருந்ததைப் போன்று வெளிப்படையாக நீங்கள் கண்டனம் செய்திருக்கிறீர்கள். அதற்காக உங்களை நான் குறைகூற மாட்டேன்.

மாவை உட்பட உங்கள் விருப்பத்துக்குரிய இந்த திராணியற்ற கூட்டம் யாழ்ப்பாணத்தில் ஜப்பானிய தூதுவரை சந்தித்த பிறகு ராஜபக்ஷக்கள் அதிகாரத்தில் இருக்கும்வரை இலங்கைக்கு ஜப்பான் நிதியுதவி செய்யப்போவதில்லை என்று கூறியதாக அறிக்கை விடுத்தபோது நீங்கள் எங்கே இருந்தீர்கள்? உங்கள் பத்தியில் அது குறித்து நீங்கள் மௌனம் சாதித்ததை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இது பெரும் அவமரியாதையை ஏற்படுத்தியது. ஆனால், உங்களுக்கு அது ஒரு பிரச்னையாக தெரியவில்லை.

சம்பந்தனும் சுமந்திரனும் இந்த சர்ச்சையை உருவாக்கியபோது மாத்திரம் அவர்களை கர்ண கடூரமாக நீங்கள் தாக்குகிறீர்கள். இது நீங்கள் கடைப்பிடிக்கின்ற வஞ்சகத்தனமான இதழியல் போக்காகும். உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி ஒருபோதும் பருந்தாகாது என்ற பழமொழியை நீங்கள் உறுதிப்படுத்துகிறீர்கள்.”

*இதுவே, அந்த வாசகர் முன்வைத்த குற்றச்சாட்டு. ஜப்பானிய தூதுவருடனான சந்திப்பின் பின் எந்த எம்.பியும் அப்படியோர் அறிக்கை விட்டதாக எமக்கு தெரியவரவில்லை. ஆனால், கொழும்பு ஊடகம் ஒன்றே அப்படியொரு செய்தியை வெளியிட்டிருந்தது. ஆனால், அதனை மறுதினமே அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் சித்தார்த்தன் எம்.பி. மறுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதன் பின்னர் அதனைக் கண்டிப்பது, அந்த தவறான செய்தியை வெளியிட்ட ஊடகத்தைக் கண்டிக்கலாமே தவிர, கூட்டமைப்பு எம்.பிக்களை அல்ல.*

*அந்த வாசகர் கூறுவதுபோல, சம்பந்தன், சுமந்திரன் தவறு விட்டால் மாத்திரமல்ல, மற்றவர்கள் தவறு செய்கின்றபோதிலும் இந்தப் பத்தியில் கர்ணகடூரமாக கண்டிக்கவே செய்கின்றோம். அதிகம் ஏன், அவர் எந்த தலையங்கத்தைப் பார்த்துவிட்டு இந்த கடிதத்தை அனுப்பினாரோ அதே நாளன்றும் இந்தப் பத்தியில், ஆறு கட்சி தலைவர்கள் தமிழ் மக்கள் தலையில் மிளகாய் அரைக்கிறார்களா என்று கேள்வி எழுப்பியிருந்ததை அவர் படிக்கவில்லைப் போலும். அந்த ஆறு கட்சித் தலைவர்களில் மூவர் இவர் சொல்கின்ற தலைவர்கள்தான்.*

*இந்த ஊர்க்குருவி எந்த வேளையிலும் தன்னை பருந்தென்று அழைத்ததும் இல்லை. நினைத்ததும் இல்லை. ஆனால், அது உயரப்பறக்கின்றது என்பதை அந்த வாசகர் பார்த்து சொல்லியிருக்கிறார். பறக்கின்ற குருவிக்கு, தான் எவ்வளவு உயரத்தில் பறக்கின்றேன் என்பது கவனத்தில் இருப்பதில்லை.!*

**- ஊர்க்குருவி**

# ரணில் வெற்றி பெறுவதற்காக நான்கு முனைகளில் நடவடிக்கை!

*கொழும்பு, ஜுலை 25*

*நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்வதற்காக நான்கு முனைகளில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.*

*ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சஜித், டலஸ் இருவரும் எதிர்த்தரப்பில் இருந்து போட்டியிடவிருந்தனர். ரணிலுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் என்ற சூழலில் சஜித் பிரேமதாஸ போட்டியிலிருந்து விலகி, டலஸுக்கு ஆதரவு தெரிவித்தார்.*

*இதையடுத்து, ரணில் தரப்பு தங்களுக்கு சாதகமாக களம் அமைத்துக் கொள்ள அந்த நிமிடத்தில் இருந்தே நான்கு முனை நடவடிக்கைகளை தொடங்கியது.*

*அந்த நடவடிக்கைகளில் ஒன்று, போராட்டம் நடைபெற்று வரும் ஜனாதிபதி செயலகத்துக்கு தொலைவில் உள்ள ஷங்ரிலா ஹோட்டலில் உள்ள உயர் அறையில் இருந்து தொடங்கியது. ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினர் இதனை வழி நடத்தினர்.*

*இரண்டாவது நடவடிக்கை பத்தரமுல்லையில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் தொடங்கியது. பஸில் ராஜபக்ஷ இந்த நடவடிக்கைக்கு தலைமை தாங்கியிருந்தார்.*

*மூன்றாவது நடவடிக்கை வஜிர அபேவர்த்தனவின் வீட்டில் தொடங்கியது.*

*நான்காவது நடவடிக்கை சிங்கப்பூரில் இருந்து தொடங்கியது. தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவே இந்த நடவடிக்கைக்கு தலைமை தாங்கினார். இது தவிர, பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களை தனது கட்சிக்கு நியமிக்கும் தனி நடவடிக்கையையும் ரணில் நடத்தினார் என்றும் கூறப்படுகின்றது. (சி)*

# உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியின் விளையாட்டு விழா!

*வடமராட்சி, ஜுலை 25*

உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியின் 2022 ஆம் ஆண்டுக்கான செயல்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு முன்பள்ளியின் முன்றலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

அருட்திரு செ. துரைரட்ணம் (சபைக்குரு) தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியசீலன் பங்கேற்று சிறப்பித்தார். இந்த விழாவில் சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள், இசையும் நடனமும் நிகழ்வு, வினோத உடைப்போட்டி நிகழ்வு உட்பட பல நிகழ் வுகளும் சிறப்பாக இடம் பெற்றன.

இதில் முன்பள்ளி நிர்வாக சபை உறுப்பினர்கள், மூத்த ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகளை பார்த்து ரசித்ததோடு சிறார்களுக்கு உற்சாகமும் ஊட்டினர். (ஐ)

# 3750 தொன் எரிவாயுடன் கப்பல் நேற்று வந்தது!

*கொழும்பு, ஜுலை 25*

சமையல் எரிவாயுவை ஏற்றிய 6ஆவது கப்பல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாட்டை வந்தடைந்தது.

இந்த கப்பலில 3,750 மெற்றிக் தொன் எரிவாயு கொண்டு வரப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்த கப்பலிலிருந்து எரிவாயுவை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்துக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் நேற்று முதல் எரிவாயு விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேசமயம், இன்றைய தினம் ஏனைய மாகாணங்களுக்கு முன்னுரிமையளித்து சமையல் எரிவாயு சிலிண்டர் கள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் கூறப்பட்டது.(ஐ)

# இரு மீனவர்களை காணவில்லை!

*கொழும்பு, ஜுலை 25*

*அம்பலாந்தோட்டை கொடவாய துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் இருவர் காணாமல் போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*கடந்த 20 ஆம் திகதி தனுஷ்க மெரின் என்ற ஒருநாள் படகில் மீன்பிடிப்பதற்காக செனற 29 மற்றும் 41 வயதுகளையுடைய கொடவாய பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.இவர்கள் வீடு திரும்பாமை தொடர்பில் உறவினர்கள் அம் பாலந்தோட்டை கரையோர பொலிஸில் முறைப்பாடு செய் துள்ளனர்.*

*குறித்த இருவரும் காணாமல் போனமை தொடர்பில் கடற்படையினரின் கவனத்துக்குக் கெபாண்டு சென்றுள்ளதாக கரையோர பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித் தகவலும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (கே)*

# கடன் அட்டைகளுக்கான வட்டி வீதம் அதிகரிப்பு!

*கொழும்பு, ஜுலை 25*

*இலங்கையில் உள்ள பல வர்த்தக வங்கிகள் கடன் அட்டைகளுக்கான வருடாந்த வட்டி வீதத்தை அதிகரித்துள்ளன.*

*கடன் அட்டைகளுக்கான வருடாந்த வட்டி வீதம் 36 சத வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வங்கிகள் தெரிவித்தன.*

*கடன் அட்டைகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்களின் விதிக்கப்பட்ட வரம்புகளை நீக்க , மத்திய வங்கியின் நாணயச் சபை ஏப்ரல் 8 ஆம் திகதி தீர்மானித்தது.*

*அதன் பிறகு, வட்டி வீதங்கள் ஏற்கெனவே இருந்த 18 வீதத்திலிருந்து 24 வீதமாகவும், பின்னர் 30 வீதமாகவும், தற்போது மீண்டும் 36 வீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ஐ)*

# போராட்டக்காரர்கள் அகற்றம் பாராளுமன்றில் புதன் விவாதம்!

*கொழும்பு, ஜுலை 25*

*காலிமுகத்திடல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள “கோட்ட கோ கம” போராட்டக்காரர்களை அங்கிருந்து அகற்றியமை தொடர்பில் விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.*

*நாளை மறுதினம் புதன் கிழமை இது தொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.*

*இது தொடர்பான விவாதத்துக்காக பாராளுமன்றத்தை கூட்டுமாறு நேற்று எதிர்கட்சியின் பிரதான அமைப்பாளரான லக்ஷ்மன் கிரியெல்ல, பிரதமர் தினேஸ் குணவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்தார்.*

*எரிபொருள் பிரச்னை காரணமாக பாராளுமன்றத்தை கூட்டுவதும் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைப்பதும் நடைமுறையில் கடினமானது என்பதால் அவசரகால சட்ட வர்த்தமானி அறிவித்தலை நிறைவேற்றுவதற்காக புதன் கிழமை பாராளுமன்றம் கூடும் போது இந்த விடயத்தையும் விவாதிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. (ஐ)*

ஈழநாடு
Eelanadu
25.07.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆடி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# கூட்டமைப்பின் அடுத்த தலைமை?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தொடர்பில் எதிர்காலம் சிக்கலானதாக இருக்கப் போகின்றது. அதற்கான அறிகுறிகள் இப்போதே தெளிவாகத் தெரிகின்றன. தற்போது தலைவராக இருக்கின்ற சம்பந்தன் பெயரளவிலேயே தலைவராக இருக்கின்றார். நோய்வாய்ப்பட்டிருக்கின்ற காரணத்தால் அவரால் திறம்பட செயல்பட முடியாது. அவரின் சொந்தத் தொகுதியான திருகோணமலை மாவட்டத்துக்கு கடந்த ஒன்றரை வருடங்களாக சம்பந்தன் செல்லவில்லை. திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், தமிழ் பிரதிநித்துவம் இல்லாமலேயே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இந்த நிலையில், அவர் வசமுள்ள பாராளுமன்ற குழுத் தலைவர் பொறுப்பை பங்காளிக் கட்சிகளின் தலைவர் ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்னும் அபிப்பிராயங்கள் சிவில் சமூக பரப்பில் இருக்கின்றன.

இவ்வாறானதொரு சூழலில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதன், சம்பந்தனுக்கு பின்னர் கூட்டமைப்பின் தலைமை சுழற்சி முறையில் இடம்பெற வேண்டுமென்றும், தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த ஒருவர் மட்டும் இருக்க முடியாதென்றும் தெரிவித்திருக்கின்றார். சம்பந்தனுக்குப் பின்னர் கூட்டமைப்பின் நிலைமை சிக்கலடையும் என்பதையே அவரின் கூற்று எடுத்துரைக்கின்றது. கூட்டமைப்பிற்குள் நீண்டகாலமாக கட்சி மோதல்கள் இடம்பெற்றுவருகின்றது. எனினும், பங்காளிக் கட்சிகளின் விட்டுக் கொடுப்புக்களின் காரணமாக கூட்டமைப்பு தொடர்ந்தும் ஒரு தேர்தல் கூட்டாக நீடிக்கின்றது.

கூட்டமைப்பை தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்க முடியுமா? இந்தக் கேள்வி பலரிடம் உண்டு. சம்பந்தனுக்கு பின்னர் கூட்டமைப்பை, கூட்டமைப்பாக தொடர்வது பிரச்னைக்குரிய ஒன்றாகவே இருக்கும். கூட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டுமாயின் சில விடயங்கள் உடனடியாக செய்யப்பட வேண்டும். அதாவது, சம்பந்தன், அவர் வசமுள்ள பாராளுமன்ற குழுத் தலைவர் பொறுப்பை, பங்காளிக் கட்சியின் தலைவர் ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும். பங்காளிக் கட்சிகளின் தலைவர் ஒருவர் பாராளுமன்ற குழுத் தலைவரானால், கூட்டமைப்புடன் தொடர்ந்தும் பயணிக்க முடியுமென்னும் நம்பிக்கை பங்காளிக் கட்சிகள் மத்தியில் பலமடையும். சம்பந்தனுக்கு பின்னரும் கூட்டமைப்பைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்னும் உந்துதலும் கரிசனையும் அவர்களுக்குள் ஏற்படும்.

ஏனெனில், கூட்டமைப்பின் பேச்சாளர் பொறுப்பை தங்களிடம் வழங்குமாறு, ரெலோ தலைவர், செல்வம் அடைக்கலநாதன் கோரிய போதிலும், அது வழங்கப்படவில்லை. சுமந்திரனே தொடர்ந்தும் பேச்சாளராக இருக்கின்றார். சுமந்திரன் தொடர்பில் பங்காளிக் கட்சிகள் மத்தியில் எதிர்மறையான கருத்துக்கள் இருக்கின்றன என்பது இரகசியமான ஒன்றல்ல. ஒற்றுமையென்பது வாயால் கூறுகின்ற விடயமல்ல. ஏனைய கட்சிகளுக்கு சமதையான கௌரவம் இருக்கின்றபோதுதான், ஓர் அரசியல் கூட்டு நிலைக்க முடியும்.

மலையகக் கட்சிகள், தங்களுக்குள் ஒன்றுபட்டு, வெற்றிகரமாக ஒரு கூட்டை ஏற்படுத்தியிருக்கின்றன. அவர்களால் முடிந்த ஒரு விடயம் ஏன் கூட்டமைப்பினால் முடியவில்லை? ஆரம்பத்திலிருந்தே கூட்டமைப்பை தனித்துவமான ஓர் அரசியல் ஸ்தாபனமாக முன்கொண்டு செல்வதற்கு தமிழ் அரசுக் கட்சியே தடையாக இருந்தது. இது தொடர்பில் நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியிருக்கின்றோம். ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர் என்போரிடமுள்ள தலைமைத்துவ பலவீனத்தின் காரணமாக, அவர்கள் எதனையும் பொருட்படுத்தவில்லை. தலைவர்கள் என்போர் அதிகம் கேட்பதற்கும் கிரகிப்பதற்கும் தயாராக இருக்க வேண்டும். ஆனால், தமிழ்த் தேசிய பரப்பில் இந்தப் பண்பு மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுவதாகக் கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளால், தங்களுடைய அரசியல் தலைமைத்துவத்தை ஒற்றுமையுடன் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதாயின், அவ்வாறான கட்சிகள் மக்களை பிரதிநித்துவம் செய்யும் தகுதிக்கு உரிமை கோர முடியாது.

# வெப்ப அலைகள்:

## இனி அடிக்கடி உலகை தாக்கும்!



*ஐரோப்பிய நாடுகளில் வெப்ப அலைகள் தாக்கி அதிகளவான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. உலகம் முழுவதும் வெப்ப அலைகள் குறித்தான விஷயம் பேசு பொருளாகியுள்ளது. தற்போது ஏற்பட்டிருக்கும் அதிகப்படியான வெப்ப அலைகளை - மனதில் கொண்டாவது, காலநிலை மாற்றங்களை நினைவில் வைத்துக் கொண்டாவது, வளிமண்டலத்தில் தொடர்ந்து அதிகப்படியான காபநீர் ஒட்சைட் வெளியேற்றும் நாடுகள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் உலக வானிலை அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.*

*இது குறித்து ஜெனிவாவில் செய்தியாளர்களிடம் பேசிய உலக வானிலை அமைப்பின் தலைவர் பெட்டெரி தாலஸ், ”காலநிலை மாற்றத்திற்கு எதிராக உலக நாடுகளின் அனைத்து தணிப்பு முயற்சிகளையும் தாண்டி, உலகில் கடுமையான வெப்ப அலைகள் அடிக்கடி ஏற்படுகின்றன. இந்த வெப்ப அலைகளின் எதிர்மறைமையான போக்கு 2026 வரையிலும் நீடிக்க வாய்ப்புள்ளது. இது போன்ற வெப்ப அலைகள் ஏற்படுவது வருங்காலத்தில் மிகவும் சாதாரண ஒரு விஷயமாக மாறிவிடும். இதன் வலுவான உச்சநிலையை விரைவில் நாம் காண்போம். உலகில் வெப்ப உமிழ்வுகள் அதிகரித்து வருகின்றன. இந்த வெப்ப உமிழ்வுகள் அதிகரிப்பதை நாம் தடுக்காவிட்டால் 2026இல் இதன் உச்சத்தை காண்போம். குறிப்பாக ஆசியா நாடுகளில்தான் இந்த வெப்ப உமிழ்வு அதிகமாக இருக்கிறது” - என்றார்.*


*மேற்கு ஐரோப்பாவை தாக்கி வரும் கடுமையான வெப்ப அலைகளைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் உலக வானிலை அமைப்பு, உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து கூட்டு செய்தியாளர் சந்திப்பை நடத்தியது. அதில் பேசிய உலக வானிலை அமைப்பின் காலநிலை சேவை பிரிவின் தலைவர் ராபர்ட் ஸ்டீபன்ஸ்கி.*

*“முதன்முறையாக பிரிட்டனில் 40 பாகை செல்சியஸ் (104 டிகிரி பரனைட்) வெப்பநிலையை அடைவதற்கு முன், வெப்ப அலைகள் வடக்கு பகுதிகளில் பரவி காட்டுத் தீயை ஏற்படுத்தின. பிரான்ஸ், இங்கிலாந்து ஒருவேளை சுவிற்சர்லாந்து முழுவதும் வெப்ப நிலை உச்சத்தில் இருக்கலாம். எல்லோரும் எங்களைப் பார்த்து கேட்கும் கேள்வி, இது எப்போது முடிவடையும் என்பதுதான்.*

*எல்லாவற்றையும் வைத்து பார்க்கும்போது இந்த நிலை அடுத்த வாரம் வரை இருக்கலாம். கடந்த ஆண்டு தெற்கு இத்தாலியில் வெப்பநிலை 48.8 பாகை செல்சியஸை தொட்டபோது, இத்தாலியில் அதுவரை இருந்த வெப்ப சாதனை முறியடிக்கப்பட்டது. எங்கள் கவலை என்னவென்றால் இந்த வெப்ப அலைகள் வீசிக் கொண்டிருப்பதற்கு இடையில், குறுகிய காலத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன” என்றார்.*

*உலக சுகாதார நிறுவனத்தின் காலநிலை மாற்றம் மற்றும் சுகாதார இயக்குனர் மரியா நீரா, 2003ஆம் ஆண்டு ஐரோப்பாவில் ஏற்பட்ட வெப்ப அலைகளின் காரணமாக 70,000க்கும் மேற்பட்ட மக்கள் பலியானதை நினைவுகூர்ந்தார். நேரடி விளைவுகளை ஏற்படுத்தும் வெப்ப அலைகளால் மட்டுமல்லாமல், காலநிலை மாற்றமும் நமது ஆரோக்கியத்தைப் பல வழிகளில் பாதிக்கிறது, அதனால் நோய்களின் அதிகரிப்பு போன்ற சுகாதார சிக்கல்கள் ஏற்படுகின்றன. உலக மக்கள்தொகையில் 99 சதவீதம் பேர் சுகாதாரத் தரமற்ற காற்றை சுவாசிக்கிறார்கள்” என எச்சரித்துள்ளார்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

ஜூலை - 25 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 09
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : துவாதசி




**மேடம்**
உங்கள் செயல் திறனால் நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். குடும்பத்துடன் வழிபாட்டில் பங்கேற்பீர்கள். பண வரவு உண்டாகும். இனிய நாள். வெளியூர் பயணம் லாபம் தரும்.

**இடபம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். விலகிச்சென்ற உறவினர்கள் தேடி வருவர். குடும்பத்தினரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள். செலவு அதிகரிக்கும். சிந்தித்து செயல்பட்டால் செலவு குறையும்.

**மிதுனம்**
பழைய பிரச்னை ஒன்று விசுவரூபம் எடுக்கும். நண்பர்கள் உதவுவர். திட்டமிட்ட செயலிலும் செலவுகள் அதிகரிக்கும். சங்கடங்கள் தோன்றும். பயணத்தில் சங்கடம் தோன்றும்.

**கடகம்**
நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். பண வரவால் நிதிநிலை உயரும். நீண்ட நாளாக இருந்த பிரச்சினை ஒன்றில் நல்ல முடிவு ஏற்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

**சிம்மம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழிலில் ஏற்பட்ட தடைகள் விலகும். கடன் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**
குடும்ப நலனில் கவனம் செலுத்துவீர்கள். சொத்து வாங்கும் எண்ணம் நிறைவேறும். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள. பணவரவில் இருந்த தடை விலகும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் தொடர்வதால் செயலில் கவனம் தேவை. அமைதி காப்பது நல்லது. வெளியூர் பயணங்களில் சங்கடங்களை சந்திப்பீர்கள். செயல்களில் குழப்பம் ஏற்படும். விழிப்புணர்வு தேவை.

**விருட்சிகம்**
தம்பதிகளுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகும். மகிழ்ச்சியான நாள். குடும்பத்தினருடன் பொழுதை கழிப்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு**
நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். பூர்வீகச் சொத்து விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை பேசி தீர்ப்பீர்கள். தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்**
தடைபட்ட செயல்களை செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். குலதெய்வ வழிபாடு அவசியம். எதிர்பாராத லாபம் உண்டாகும்.

**கும்பம்**
எதிர்பாராத பயணம் ஏற்படும். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவி செய்வர். தடைபட்டிருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். ஆதாயமான நாள். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்**
துணிச்சலுடன் ஒரு செயலில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். குலதெய்வத்தை வழிபடு வீர்கள். உங்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும். உறவினருடன் ஏற்பட்ட பகை விலகும்.



# இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்த போராட்டம்!

*சென்னை, ஜூலை. 25*

ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த 21 ஆம் திகதி மீன் பிடிப்பதற்கான அனுமதி சீட்டைப் பெற்று 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

இந்த நிலையில் தனுஷ் கோடி - தலைமன்னார் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதிக்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படை எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி ஒரு விசைப்படகையும் அதிலிருந்த ஆறு மீனவர்களையும் கைது செய்தது.

இதையடுத்து நேற்று முன் தினம் ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள ஜான் மடிக்கட்டுமிடத்தில் மீனவர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தி காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக அறிவித்தனர்.

இதை அடுத்து நேற்று ராமேஸ்வரம் துறைமுகத்தில் 700 க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லாமல் தங்களுடைய படகுகளை மீனவர்கள் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளனர்.

இதனால் ஒரு நாளைக்கு ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் இழப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

இதற்கு மத்திய, மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்து இலங்கை சிறையில் உள்ள ஆறு மீனவர்களையும் படகையும் விடுதலை செய்ய வேண்டும் என மீனவர்கள் வலியுறுத்தி உள்ளனர். (அ)

# பிரதமர் மோடி இரண்டு நாள் பயணமாக சென்னை வருகிறார்

*சென்னை, ஜூலை. 25*

மாமல்லபுரத்தில் 44ஆவது சர்வதேச ‘செஸ் ஒலிம்பியாட்’ போட்டி வருகிற 28-ஆம் திகதி தொடங்கி ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இதற்காக பூஞ்சேரியில் உள்ள ‘போர் பாயிண்ட்ஸ்’ அரங்கத்தில் பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. இதில் 188 நாடுகளை சேர்ந்த செஸ் வீரர்கள், வீராங்கனைகள் உள்ளிட்ட 2,500க்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர். போட்டியில் பங்கேற்க வருபவர்களுக்கு வரவேற்பு, விருந்தோம்பல், கலைநிகழ்ச்சி, தங்கும்வசதி, உணவு, உபசரித்தல், போக்குவரத்து, பாதுகாப்பு, நிறைவுவிழா உள்ளிட்டவைகளை கவனிக்க தமிழக அரசு சார்பில் 18 குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளது. அவர்கள் தீவிரமாக கண்காணித்து போட்டிக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

சென்னை நேரு உள் விளையாட்டரங்கில் தொடக்க விழா நடைபெறுகிறது. முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி வாயிலாக செஸ் ஒலிம்பியாட் போட்டியின் தொடக்க விழாவில் பங்கேற்க வரும்படி பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும் கடந்த ஜூலை 19ஆம் திகதி பிரதமர்



மோடியை நேரில் சந்தித்து . திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி, அமைச்சர் மெய்யநாதன், தலைமை செயலர் இறையன்பு ஆகியோர் அழைப்பிதழை வழங்கினர்.

இந்த நிலையில் பிரதமர் மோடி 2 நாள் பயணமாக சென்னை வருகிறார். செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழா, அண்ணா பல்கலை. பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க அவர் சென்னை வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் 14 மாவட்ட செயலாளர்கள்

*சென்னை, ஜூலை. 25*

அதிமுக வில் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பன்னீர் செல்வம் இருவருக்கும் இடையே யார் தலைமை ஏற்பது என்ற போட்டி நிலவி வருகிறது. இந்த சூழலில் 14 மாவட்ட செயலர்களை நியமிப்பதாக ஓ.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார். அதன்படி ராமநாதபுரம் மாவட்ட செயலராக ஆர். தர்மரும், கோவை மாநகர் மாவட்ட செயலராக கோவை செல்வராஜும், மதுரை மாநகர் மாவட்ட செயலராக முன்னாள் எம்.பி., ஆர்.கோபாலகிருஷ்ணனும் நியமிக்கப்பட்டுள்ளனர். வட சென்னை வடக்கு (மேற்கு) மாவட்ட செயலராக கொளத்தூர் கிருஷ்னமூர்த்தியும், சென்னை புறநகர் மாவட்ட செயலராக வெங்கட்ராமனும், எம்.எம்.பாபு தென்சென்னை மேற்கு மாவட்ட செயலராகவும், அம்பிகாபதி தென் சென்னை வடக்கு மாவட்ட செயலராகவும், ரமேஷ் வடசென்னை வடக்கு (கிழக்கு) மாவட்ட செயலராகவும் நியமிக்கப்பட்டு உள்ளனர். ராஜ் மோகன் திருச்சி புறநகர் மாவட்ட செயலராகவும், மதியளகன் வடசென்னை தெற்கு( மேற்கு) மாவட்ட செயலராகவும், அசோகன் சிவகங்கை மாவட்ட செயலராகவும், ரஞ்சித் குமார் காஞ்சிபுரம் மாவட்ட செயலராகவும், சிவலிங்கமுத்து திருநெல்வேலி புறநகர மாவட்ட செயலராகவும், தவசி தென்காசி தெற்கு மாவட்ட செயலராகவும், நியமிக்கப்பட்டு உள்ளனர். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட செயலர்களுக்கு கழக உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும் என்றும் அறிக்கையில் ஓ.பி.எஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.







# நல்லூர் கந்தசுவாமி திருவிழா; காளாஞ்சி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 25

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தல்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுக்கு உரியவர்களுக்கான காளாஞ்சி மாட்டு வண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ -3)

# மணல் கடத்தல் வாகனங்களால் வடமராட்சியில் விபத்துகள் உயர்வு

## நேற்று அதிகாலையும் இரு விபத்துகள்

வடமராட்சி, ஜூலை 25

**சட்டவிரோதமாக மணல் ஏற்றி சென்ற ஹன்ரர் ரக வாகனம் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மற்றும் தனியார் பேருந்து ஆகியவற்றுடன் விபத்தை ஏற்படுத்தி விட்டுத் தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் மந்திகை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றி மிக வேகமாக சென்ற ஹன்ரர் ரக வாகனம் வேக கட்டுப்பாட்டை இழந்து டீசல் பெறக் காத்திருந்த தனியார் பேருந்தை மோதியது. எனினும், அங்கிருந்து தப்பி சென்று , பருத்தித்துறையில் இருந்து கொக்கிளாய் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துடனும் மோதியது.

இந்த சம்பவங்களில் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

இரு விபத்துக்கள் தொடர்பிலும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த டிப்பர் ரக வாகனம் நெல்லியடி மாலை சந்தை பிள்ளையார் கோவில் திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் மத்தியில் புகுந்து விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பி சென்றது. அதில் 7 பேர் படுகாயமடைந்தனர்.

சட்டவிரோத மணல் கடத்தல்காரர்களால் வடமராட்சி பகுதிகளில் விபத்து சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# பொலிஸாரின் பாதுகாப்பு இல்லாமல் பரந்தனில் எரிபொருள் விநியோகம்!

## குழப்பங்கள் ஏதுமின்றி இடம்பெற்றது

கிளிநொச்சி, ஜூலை 25

கிளிநொச்சி பரந்தனில் பொலிஸார் இன்றி பிரதேச செயலாளரின் கண்காணிப்பில் அமைதியாக எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்பட்டது.

கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரனுடன் நேற்றுமுன்தினம் பொலிஸார் முரண்பட்டிருந்தனர். பொதுமக்களுக்கு எரிபொருள் வழங்கும் அதே நேரம் பொலிஸாருக்கும் வழங்கக் கேட்கப்பட்டது. இதற்கு பிரதேச செயலர் மறுத்துள்ளார்.

இந்த நிலையில், பொலிஸ் அதிகாரி ஒருவர் பிரதேச செயலாளருடன் முரண்பட்டதுடன், எச்சரிக்கையும் விடுத்திருந்தார் என்று குற்றம்சாட்டப்பட்டிருந்தது. அத்துடன், இனி பாதுகாப்பு கடமைக்கு வரமாட்டோம் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில், நேற்று பரந்தன் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்கப்பட்டது. நேற்றுமுன்தினம் இலக்கத்துக்கு தொடர் இலக்கம் வழங்கப்பட்டு நேற்று எரிபொருள் வழங்கப்பட்டது.

இதன்போது, பாதுகாப்பு கடமையில் பொலிஸார் இருக்கவில்லை. எனினும், இந்த நிலையில், பிரதேச செயலாளரின் நெறிப்படுத்தலில், கிராம சேவையாளர்கள் மற்றும், உத்தியோகத்தர்களின் கண்காணிப்பில் அமைதியான முறையில் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது. (ஐ)

# வன்முறைகளை கட்டவிழ்ப்பதை பணியாக்கியுள்ளார் ஜனாதிபதி!

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி

கொழும்பு, ஜூலை 25

நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு பதிலாக புதிய ஜனாதிபதி வன்முறையை கட்டவிழ்க்கும் பணியை முதல் பணியாக ஆரம்பித்துள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியிடம் இந்த நாடானது எதனை எதிர்பார்க்கின்றது என்பதை முதலில் அவர் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உண்மையில், தற்போதைய ஜனாதிபதி மக்கள் ஆணையில் ஜனாதிபதியாகவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளுடனேயே அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கோட்டாபய - ரணில் அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக இருந்தது. எனினும், பாராளுமன்ற உறுப்பினர்களினன் நிலைப்பாட்டிலும் மக்களின் எண்ணப்பாட்டிலும் வேறுபாடு காணப்படுகின்றது.

புதிய ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு மீளக்கட்டியெழுப்ப போகின்றார் என்பது எம் முன் உள்ள கேள்வியாக உள்ளது. இதே போன்று நாட்டு மக்கள் தற்போது வாழ்வாதார சுமையை எதிர்கொண்டு வருகின்றனர். மக்கள் வரிசையில் நிற்பது அதிகரித்து வருகின்றது.

எரிவாயு, எரிபொருள், பால்மா, அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு பதிலாக வன்முறையை கட்டவிழ்த்துவிடும் பணியை அவர் முதல் பணியாக ஆரம்பித்துள்ளார்.

கொழும்பு காலிமுகத்திடல்



இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். காலிமுகத்திடலில் சுதந்திரமான முறையிலும் அமைதியான முறையிலுமே இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

பல்வேறு அடிப்படை காரணங்களை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறான அடிப்படை காரணங்களை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டத் தரப்பினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றும் கூறினார். (கே)

# கியூ. ஆர். குறியீட்டு முறை 20 மாவட்டங்களில் வெற்றி!

கொழும்பு, ஜூலை 25

நாடு முழுவதும் 20 மாவட்டங்களில் 4 ஆயிரத்து 708 வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு தேசிய எரிபொருள் அனுமதியான கியூ. ஆர். குறியீட்டு முறைமை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளது என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 25 இடங்களில் சோதனை நடத்த திட்டமிடப்பட்டது. எரிபொருள் கொள்வனவுக் கட்டளை வழங்குவதில் தாமதம் மற்றும் விநியோகம் தாமதம் காரணமாகவும், சோதனை செய்யப்படாத 5 மாவட்டங்களில் அடுத்த 2 நாள்களில் பரிசோதனை செய்யப்படும் என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். (ஐ)

# தென்மாகாண பாடசாலைகள் ஐந்து நாட்களும் நடைபெறும்!

காலி, ஜூலை 25

தென் மாகாணப் பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வாரத்தின் ஐந்து நாட்களும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

மேற்படி தீர்மானம் தென் மாகாணத்துக்கு உட்பட்ட அனைத்து அரச பாடசாலைகளுக்கும் பொருந்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# தனியாருக்கு தாராளம் காட்டும் வவுனியா இ. போ. ச. சாலை!

வவுனியா, ஜூலை 25

இலங்கை போக்குவரத்து சபை சாலைகளில் தனியார் பேருந்துகளிற்கு எரிபொருள் விநியோகிப்பது தொடர்பான பல சர்ச்சைகள் நீடித்து வரும் நிலையில், வவுனியா சாலையில் வித்தியாசமான சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

அங்கு, தனியாருக்கு ஒதுக்கப்பட்ட அளவை விட அதிக எவான எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றன என்று சமூக ஊடகங்களில் குற்றம்சாட்டப்படுள்ளது.

உள்ளூர் சேவை பேருந்துகளுக்கு 40 லீற்றர் டீசலும் வெளியூர் சேவை பேருந்துகளுக்கு 75 லீற்றர் டீசலும் வழங்கப்பட்ட வேண்டும். ஆனால், வவுனியா சாலையால் உள்ளூார் சேவைக்கு 90 லீற்றர் டீசலும், வெளியூர் சேவை பேருந்துகளுக்கு 150 லீற்றர் டீசலும் வழங்கப்பட்டுள்ளன என்று பற்றுச்சீட்டுக்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், விதிமுறையை மீறி கொள்கலனிலும் எரிபொருள் விநியோகிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

# மகிந்த, கோட்டாபயவுக்கு தடைகளை விதியுங்கள்!

## கனடாவை கோரினார் அந்நாட்டு எம்.பி.

ஒட்டாவா, ஜூலை 25

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராகக் கனடிய அரசு தடைகளை விதிக்க வேண்டும் என்று அந்த நாட்டின் ஆளும் லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.**

இலங்கையின் சமகால அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் ஒட்டாவாவில் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கை மிகக் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு அங்கு ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பின்பற்றி வந்திருந்த தவறான கொள்கைகளே காரணமாக உள்ளன.

குறிப்பாக, போர் முடிவடைந்து 13ஆண்டுகளாகின்ற போதும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மேம்படுத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

இதேநேரம், அந்தப்போரில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறப்படவில்லை.

குறிப்பாக, 2008, 2009ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இலங்கையின் தமிழர்களின் தாயகப் பகுதிகளில் நடத்தப்பட்ட கொடூரங்களுக்கு இன்னமும் பொறுப்புக்கூறப்படவில்லை. இதற்கு பொறுப்புக்கூறவேண்டிய தலைவர்களின் பிரதான நபர்களாக இருப்பவர்கள் கோட்டாபய ராஜபக்ஷவும், மகிந்த ராஜபக்ஷவுமே ஆவர்.

இவ்வாறான நிலையில் மக்கள் புரட்சியின் காரணமாக கோட்டாபய ராஜபக்ஷ தற்போது இலங்கையில் இருந்து வெளியேறி சிங்கப்பூரில் தங்கியிருக்கின்றார். அங்கிருந்துதான் அவர் தனது இராஜிநாமாவைச் செய்துமுள்ளார். இதேபோன்று பிரதமராக இருந்த அவருடைய சகோதரர் மகிந்த ராஜபக்ஷவும் இப்போது பதவியில் இருந்து விலகியுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் கோட்டாபயவும், மகிந்தவும் தமக்கு காணப்பட்ட குற்றவியல் வழக்கு விலக்கீட்டு சிறப்புரிமைகளை இழந்துள்ளனர்.

ஆகவே, அவர்கள் மீது பொறுப்புக்கூறலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, சர்வதேச தரப்புக்கள் இந்த விடயத்தில் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

கடந்தகாலத்தில், சர்வதேச தரப்புக்கள் அவர்களை சுதந்திரமாக நடமாடுவதற்கு அளித்த வெளியை கைவிட்டு, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அனைத்து அரசாங்கங்களிடத்திலும் கோருகின்றேன்.

அத்துடன், கனடிய அரசாங்கம் கோட்டாபய, மஹிந்த ஆகிய இருவரும் நாட்டுக்குள் பிரவேசிப்பது உட்பட அனைத்துவிதமான தடைகளையும் அவர்களுக்கு எதிராக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் - என்றார். (ஐ)

# யாசகர்கள் மீதான தாக்குதலுடனேயே புதிய அரசாங்கத்தின் பணி ஆரம்பம்!

## சோசலிச இளைஞர் சங்கம்

கொழும்பு, ஜூலை 25

கொழும்பு காலிமுகத்திடல் போராட்ட பூமியில் இரவில் வந்து தங்கிவிட்டு செல்லும் யாசகர்கள்மீதே பாதுகாப்பு தரப்பினர் முதலில் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் அதன் பின்பே போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார். சோசலிச இளைஞர் சங்கம் கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், யாசகர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டே ரணில் ராஜபக்ஷவின் அரசாங்கம் தனது பணிகளை ஆரம்பித்தது. மூன்று மாதங்களுக்கும் மேலாக கொழும்பு காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் தரப்பினர் மீது ரணில் ராஜபக்ஷ முதல் வேளையாக அரச ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டார்.

இவ்வாறான செயல்பாடுகளை நாம் எவ்வகையிலும் அனுமதிக்கப்போவதில்லை என்பதுடன் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் இந்த அரசாங்கத்தை விட்டு வெளியேறுமாறு தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது.

சகல இடங்களிலும் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டு இறுதியில் கொழும்பு காலிமுகத்திடலில் சகலரும் ஒன்றுக்கூடி தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு வழிவகுக்கப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அனைவரையும் அரசாங்கத்தை விட்டு வெளியேறுமாறே கொழும்பு காலிமுகத்திடல் போராட்டத்தின் பிரதான கோரிக்கையாக அமைந்தது.

போராட்டத்தினூடாக குறித்த அரச சொத்துக்களை முற்றுகையிட வேண்டும் என்பதே போராட்டக்காரர்களின் நோக்கமாக இருந்தது. அவ்வாறு முற்றுகையிடப்பட்ட அரச சொத்துக்களை குறிப்பிட்ட சில தினங்களின் பின்னர் கையளிப்பதற்கும் போராட்டக்காரர்கள் தீர்மானித்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் தீர்மானிக்காத போதிலும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டார். அவர் ஜனாதிபதியானதன் பின்னர் அரசியலில் ரீதியில் சிறிய மாற்றமொன்று ஏற்பட்டதையடுத்து ஜனாதிபதி செயலக வளாகத்தை கையகப்படுத்தியிருப்பதில் அர்த்தமில்லை. எனவே அதனை மீள கையளிக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்துக்கு போராட்டக்காரர்கள் வந்ததனர்.

இவ்வாறு இருக்கும்போதே ரணில் ராஜபக்ஷ காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொள்வதற்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளார் - என்றார். (கே)

# 2023முதல் சகல முன்பள்ளிகளிலும் ஒரே வகையான கொள்கைதிட்டம்!

## வடமராட்சி வலய முன்பள்ளி உதவி பணிப்பாளர்

வடமராட்சி, ஜூலை 25

2023இல் தேசிய முன்பள்ளி கல்வி திட்டம் ஒன்று வருகிறது. அந்த கல்விக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் நாடு முழுவதிலும் உள்ள எல்லா முன்பள்ளிகளும் ஒரே வகையான கலைத்திட்டத்தின் அடிப்படையில்தான் முன்பள்ளிகள் சகலவற்றின் கற்றல் செயல்பாடுகளும் இடம்பெற வேண்டும் - என்று வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியின் விளையாட்டுவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுங்கள். இதன் மூலம் தான் எதிர்காலத்தில் வழிதவறி நடக்காத நல்ல பண்புள்ள சிறார்களை சிறந்த கல்விமான்களை உருவாக்க முடியும். அதற்கு முன்பள்ளி ஆசிரியர்களும், பெற்றோர்களும் உந்துசக்தியாக இந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பக்க பலமாக இருக்க வேண்டும்.

முன்பள்ளி மாணவர்களை பொறுத்தவரையில் மூன்று மணித்தியாலங்கள் மட்டும் தான் ஆசிரியர்களுடன் அவர்கள் உள்ளனர். மீதி நேரமெல்லாம் பெற்றோர்கள், குடும்ப உறவுகளுடன் இருக்கின்றனர். ஆகவே, பெற்றோர்கள்தான் முன்பள்ளி பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

முன்பள்ளிகளில் பிள்ளைகளுக்கு எழுத்துப் பழக்குவதில்லை. எழுத்துகளை இனங்காண வைக்க வேண்டும். உயிரெழுத்து என்றால் என்ன, மெய்யெழுத்து என்றால் என்ன? என்ன வகையான எழுத்துகள் என்றாலும் பிள்ளைகள் அந்த எழுத்துகளை இனங்காணுவதற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் வழிப்படுத்த வேண்டும். பிள்ளைகளை இவ்வாறு எழுத்துக்களை இனங்காண பழக்குவதனூடாகவே பின்பு தானாகவே எழுத பழகிக் கொள்கிறது.

2023 ஆம் ஆண்டில் தேசிய முன்பள்ளி கல்விக் கொள்கைத் திட்டம் என்ற ஒன்று வருகின்றது. அந்த கல்விக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் நாடு முழுவதிலும் உள்ள எல்லா முன்பள்ளிகளும் ஒரே வகையான கலைத்திட்டத்தின் அடிப்படையில்தான் முன்பள்ளிகள் சகலவற்றின் கற்றல் செயல்பாடுகளும் இடம்பெற வேண்டும். அதற்குரிய செயல்பாடுகள் தேசிய கல்வி நிறுவகத்தின் ஊடாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் போது, எழுத்துப் பழக்குதல் தொடர்பான பிரச்சினைகள் அனைத்தும் ஒரு நிலைக்கு கொண்டுவரப்படும். எனவே முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோராகிய நீங்கள் இந்த முன்பள்ளிகளிலே பிள்ளைகளை இயங்கு நிலையில் வைத்திருக்க வேண்டும் - என்றார். (ஐ)

# முல்லையின் 7 கிராமங்களுக்கு நேற்று எரிபொருள் விநியோகம்!

முல்லைத்தீவு, ஜூலை 25


முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கண்காணிப்பில் 7 கிராமங்களுக்கு பாரஊர்திகள் கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக எரிபொருள் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முறிகண்டி, வசந்தநகர், செல்வபுரம், இந்துபுரம் உள்ளிட்ட 7 கிராமங்களை சேர்ந்த மக்கள் ஒரு மாத காலமாக எரிபொருள் பெற்றுக் கொள்ள முடியாது இருந்தனர். இந்த நிலையில், 7 கிராமங்களுக்கும் பாரஊர்திகள் கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலைய மூடாக எரிபொருள் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் எரிபொருள் வழங்கல் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கிராமசேவையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கூட்டுறவு முகாமையாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இணைந்து ஒழுங்குபடுத்தல்களை மேற்கொண்டனர். கிராமங்களுக்கான நேரம் ஒதுக்கப்பட்டு சீரான ஒழுங்குபடுத்தலில் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது. (ஐ)

# முகக்கவசம் அணிதலை கட்டாயமாக்க வேண்டும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்



கொழும்பு, ஜூலை 25

புதிய பிறழ்வுடன் கூடிய கோவிட்19 நோய் மீண்டும் தலைதூக்கி இருக்கின்றது. அதனால், முகக்கவசம் அணிவது தொடர்பாக சுகாதார அமைச்சு இதற்கு முன்னர் எடுத்த தீர்மானத்தை மீள் பரிசீலிக்கவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் இயக்குநர் வைத்தியர் ஹரித அழுத்கே தெரிவித்தார்.

கோவிட்19 வைரஸ் புதிய வடிவில் மீண்டும் பரவி வருவது தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும்இ புதிய பிறழ்வுடன் கூடிய கோவிட்19 நோய் மீண்டும் தலைதூக்கி இருக்கின்றது. அதனால் முகக்கவசம் அணிவது தொடர்பாக சுகாதார அமைச்சு இதற்கு முன்னர் எடுத்த தீர்மானத்தை மீள் பரிசீலிக்க வேண்டும்.

குறைந்தபட்சம் கோவிட் தீவிர எச்சரிக்கை வலயங்களுக்கு முகக் கவசம் கட்டாயமாக்குவதற்கு அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்.

உலகில் அதிகமான நாடுகள் கோவிட்19 தொடர்பாக முறையான தீர்மானங்களை எடுத்து வரும் நிலையில் இலங்கையில் இதுவரை இது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் இருக்கின்றது. அத்துடன், தற்போது செயலிழந்திருக்கும் கோவிட் தொடர்பான தொழிநுட்ப குழுவை மீண்டும் கூட்டி, எதிர்காலத்தில் இடம்பெறும் அழிவுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பீ.ஏஇ5 என்ற புதிய கொரோனா பிறழ்வு உலகம் பூராகவும் பரவி நோயாளர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 30 வீதம் அதிகரித்திருக்கின்றது.

மிகவும் விரைவாகப் பரவும் இந்த புதியவகை பிறழ்வு இலங்கைக்கு வந்திருக்கின்றதா எனத் தேடிப்பார்க்க இதுவரை எந்த வேலைத்திட்டமும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த தினங்களில் பரவி வரும் வைரஸ் காய்ச்சல் நோயாளர்கள் மத்தியில் புதிய கொரோனா நோயாளர்கள் இருக்கலாம் என மக்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவேண்டும்.

அத்துடன், கடந்த காலங்களில் இடம்பெற்று வந்த வளம், மருந்து, அதிதீவிர சிகிச்சை பிரிவு வசதிகள் இல்லாமை தற்போதும் வைத்தியசாலை கட்டமைப்புகளில் இல்லாமல் இருக்கின்றன. இதனால் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் எச்சரிக்கையான நிலைமை இருக்கின்றது.

தற்போது பி. சி. ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் ஆயிரம் மேற்கொண்டால் அதில் 50 தொற்றாளர்கள் இனம் காணப்படுகின்றனர். அதே போன்று 3நாளைக்கு ஒரு முறை ஒரு நோயாளர் மரணிக்கிறார் - என்றார். (ஐ)

# தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற ரணிலுடன் பேசுவோம்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

**தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பெறுவதற்காக அவர்களின் ஆணை பெற்ற தரப்பு என்ற அடிப்படையில் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்துவதற்கு தயாராகவே உள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.**

மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ராஜபக்ஷக்களின் பிரதிநிதியாக ரணில் விக்கிரமசிங்க புதிய இடைக்கால ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டமையாலேயே நாம் அவரை ஆதரிப்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்திருந்தோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவான நிலையில் கூட்டமைப்பின் அடுத்தக் கட்ட அரசியல் செயல்பாடுகள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களில் பெருவாரியானவர்கள் எமக்கு ஆணை அளித்துள்ளார்கள். அவர்கள் நீண்டகாலமாக போராடி வரும் தமது அபிலாசைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். அந்த மக்களின் ஆணைபெற்றவர்கள் என்ற அடிப்படையில் நாமும் அந்த நிலைப்பாட்டில் பற்றுறுதியுடன் செயல்பட்டு வருகின்றோம். முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

அந்த வகையில், இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு, பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொறுப்புக்கூறல் உள்ளிட்ட மிக முக்கியமான விடயங்கள் தொடர்பில் நாம் புதிய ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சுக்களை மேற்கொள்வதற்கு தயராகவே உள்ளோம்.

ஆனால், எமது அபிலாசைகளைப் பெற்றுக் கொள்வதற்கான கொள்கைகளை, அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக்கொடுக்க முடியாது என்பதில் திடமாகவே உள்ளோம். இந்த விடயத்தில் மாற்றமில்லை.

இதேவேளை, ரணில் விக்கிரசிங்கவுக்கு ஆதரவு அளிக்காத நிலையில் அவருடன் பேச்சுக்களை முன்னெடுப்பது சாத்தியமாகுமா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர்,

புதிய இடைக்கால ஜனாதிபதி தெரிவின் போது நாம் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்திருக்கவில்லை. இந்த நாட்டில் மக்கள் தன்னெழுச்சியாக ஒன்றுகூடி கோட்டாபய அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தை தொடர்ச்சியாக நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள். இந்தப்பின்னணியில்தான் முதலில் மகிந்த ராஜபக்ஷவும் பின்னர் பஸில் ராஜபக்ஷவும் இறுதியாக கோட்டாபய ராஜபக்ஷவும் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை ராஜபக்ஷக்களின் முழுமையான ஆதரவுடன்தான் ரணில் விக்கிரமசிங்க நிரப்புவதற்கு தயராகியிருந்தார். ஆரம்பத்தில் பிரதமர் பதவியைப் பெற்றுக் கொண்டவர் பின்னர் பதில் ஜனாதிபதியாகி தற்போது ஜனாதிபதியாகியுள்ளார். இது அரசியலமைப்பு முறையாக நடைபெற்றிருந்தாலும், தார்மீக அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முடியாது. ஏனெனில்இ மக்களின் விருப்புக்கு எதிரானதொரு செயல்பாட்டுக்கு நாம் துணைபோக முடியாது. அதுமட்டுமன்றி எமது கொள்கைகளுக்கு முரணாகவும் செயல்பட முடியாது. அந்த அடிப்படையில்தான் ராஜபக்ஷக்களின் பிரதிநிதியாக ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை தெரிவிக்கும் முடிவை நாம் எடுத்திருக்கவில்லை.

அவர் ஜனாதிபதி பதவியில் அமர்ந்தால் ராஜபக்ஷக்களின் கை மீண்டும் ஓங்கிவிடும் என்பதால் அந்தப் பதவியை ரணில் பெற்றுக் கொள்வதை தடுக்கும் முகமாக அவருக்கு எதிராகக் களமிறங்கிய வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தை எடுத்தோம். அந்த வகையில் எமது நிலைப்பாடு சரியானது என்றே கருதுகின்றேன்.

ரணிலுக்காக நீதிமன்றம் சென்றிருக்கின்றீர்களே? தற்போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ள நீங்கள் 2018ஆம் ஆண்டு அவருக்காக நீதிமன்றத்திற்கு சென்றிருந்தீர்கள் அல்லவா? என்ற வினாவுக்கு பதிலளித்த சம்பந்தன்,

“ஆம் நாம் 2018ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கி, மகிந்த ராஜபக்ஷவை அந்தப் பதவிக்கு ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன நியமித்தமைக்கு எதிராக நீதிமன்றம் சென்றிருந்தோம்.

ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, அரசியலமைப்புக்கு முரணாக செயல்பட்டு மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வந்திருந்தார். ஆகவே, அரசியலமைப்புக்கு முரணான செயல்பாட்டை தடுத்து நிறுத்துவதற்கும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் நாம் நீதிமன்றம் சென்றிருந்தோம்.

அதனைவிடுத்து, தனிநபர்களை அடிப்படையாக வைத்து நாம் நீதிமன்றத்தை நாடியிருக்கவில்லை. ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதாக இருந்தால் அரசியலமைப்புச் சட்டங்கள் உட்பட சட்ட ஆட்சி முறையாக பின்பற்றப்படவேண்டியது அவசியமாகும் -என்றார். (ஐ)

# 19இற்கு அப்பால் செல்வதற்கும் அரசாங்கம் தயாராக உள்ளது!

## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஜூலை 25

அடுத்த பாராளுமன்ற அமர்வின்போது 22ஆவது திருத்தச்சட்ட வரைவு சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ள நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் விவகார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ 19ஆவது திருத்தத்துக்கும் அப்பால் செல்வதற்கு தயார் என்று அறிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இடைக்கால அமைச்சரவையில் நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் விவகார அமைச்சராக மீண்டும் பொறுப்பேற்ற விஜயதாஸ ராஜபக்ஷ தமது அடுத்த கட்ட செயல்பாடுகள் தொடர்பில் மேலும் கூறுகையில்,

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு 22ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவை அடுத்த பாராளுமன்ற அமர்வில் சபையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த வரைவில் மேலும் திருத்தங்களைச் செய்வதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

மேலும், தற்போதுள்ள அரசியல் நிலைமைகளின் பிரகாரம் 22ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கான வரைவில் மேலும் திருத்தங்களைச் செய்வதற்கு தயாராகவே உள்ளோம். குறிப்பாக அத்திருத்தங்கள் 19ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் செல்வதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன - என்றார். (ஐ)

# ஐக்கிய தேசிய கட்சி சார்பில் அமைச்சராகின்றார் வஜிர?

கொழும்பு, ஜூலை 25

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ள வஜிர அபேவர்த்தன அமைச்சராகவும் நியமிக்கப்படவுள்ளார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியேற்றதை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் மூலமான பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமானது. இந்த இடத்துக்கு வஜிர அபேவர்த்தன நியமிக்கப்படவுள்ளார்.

இவர், எதிர்வரும் புதன்கிழமை பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். இதேவேளையில், உருவாக்கப்படவுள்ள அனைத்து கட்சி அரசாங்கத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் அமைச்சுப் பதவி வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வஜிர அமைச்சராக நியமிக்கப்படுவார்.

அடுத்த இரண்டு வாரங்களில் அனைத்துக் கட்சிகளின் ஆட்சி அமைக்கப்படவுள்ளது என்றும் தெரிய வருகின்றது.

(சி)

ஈழநாடு



# ரஷ்யா - அமெரிக்கா புதிய விண்வெளி ஒப்பந்தம்:

# மண்ணில் பகைமையும், விண்ணில் நட்புறவும் வல்லரசுகளின் முடிவுறாத முரண்பாடுகள்



ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்யாவுடன் மீண்டும் கைகோர்த்த அமெரிக்காவின் நாசா", விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் புதிய ஒப்பந்தம் ஒன்றை கடந்த வாரம் கைச்சாத்திட்டுள்ளது. மாஸ்கோவிற்கும் வாஷிங்டனுக்கும் இடையே பனிப்போருக்குப் பிறகு நட்புறவின் அடையாளமாக விண்வெளி பயணமும், ஆராய்ச்சியே முதன்மையாக இருந்து வந்துள்ளது.

ரஷ்யா-அமெரிக்கா புதிய விண்வெளி ஒப்பந்தமானது மண்ணில் கீரியும் பாம்புமாக பகைமையாகவும், விண்ணில் இணைந்த கைகளாக நட்புறவைக் காட்டிக் கொள்வதை காணலாம்.

புதிய விண்வெளி ஒப்பந்தம்:

அமெரிக்கவின் நாசா மற்றும் ரஷ்யாவின் ரோஸ்கோஸ்மோஸ் இடையேயான புதிய விண்வெளி ஒப்பந்தத்தின் கீழ், முதல் ஒருங்கிணைந்த விண்கலங்கள் செப்டம்பர் மாதம் முதல் அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தான தன் படி இருநாடுகளும் விண்வெளி நிலைய விமானங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான உடன்பாட்டை ஏற்றுள்ளனர்.

விண்வெளியில் ஒன்றாக நட்புறவை ரஷ்ய-அமெரிக்க பேணினாலும் , களத்தில் உக்ரைன் மீதான போரால் ரஷ்யாவை அமெரிக்கா தொடர்ந்து கடுமையாக விமர்சித்து வருகிறது. அது மாத்திரமன்றி ரஷ்யாவுக்கு எதிராக பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதித்து வருகிறது. உண்மையில் கீரியும் பாம்புமாக தான் இரு நாடுகளும் பூமியில் இருக்கின்றன.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா மற்றும் ரஷிய விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் இடையே சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு விமானங்களை ஒருங்கிணைக்க நீண்டகால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். அத்துடன் அமெரிக்க விண்வெளி வீரர்கள் ரஷ்யாவின் சயூஷ் இல் சவாரி செய்வதற்கு ஈடாக ரஷ்ய விண்வெளி வீரர்கள் அமெரிக்கவில் தயாரிக்கப்பட்ட விண்கலத்தில் பறக்க அனுமதிக்கபடவுள்ளனர்.

உக்ரைன் மீது ரஷியா போர்:

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததால், அமெரிக்கா - ரஷ்யா இடையேயான விண்வெளி ஆய்வுப் பணிகள் கடந்த சில மாதங்களாக தொய்வு நிலை கண்டது. பல நாட்களாக நடந்த உயர்மட்ட சமரசங்களின் பின் மீண்டும் விண்வெளி துறையில் இருதரப்பு உறவு சுமூகமாகியுள்ளது.

அமெரிக்கா, ரஷ்ய விண்வெளி நிறுவனங்கள் கூட்டாக விடுத்த அறிக்கையில், ரோஸ்கோஸ்மோஸ் நாசாவுடனான ஒப்பந்தம் "ரஷ்யா மற்றும் அமெரிக்காவின் நீண்டகால நலன்களுக்காக உள்ளது என்றும், விண்வெளி ஆராய்ச்சி திட்டத்தின் கட்டமைப்பின் ஒத்துழைப்பு வளர்ச்சியை ஊக்குவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஜகஸ்தான் பைகோனூர் ஏவுதளம்:

எதிர்வரும் செப்டம்பரில் கஜகஸ்தானில் உள்ள ரோஸ்கோஸ்மோஸ்சின் பைகோனூர் ஏவுதளத்தில் இருந்து, அமெரிக்க விண்வெளி வீரர் பிராங்க் ரூபியோ, ரஷ்ய வீர ர்களான செர்ஜி ப்ரோகோபியேவ் மற்றும் டிமிட்ரி பெட்டலின் ஆகியோருடன் சேர்ந்து விண்வெளி நிலையத்திற்கு ரஷ்ய விண்கலத்தில் செல்வதற்கு இந்த ஒப்பந்தம் உறுதியிட்டுள்ளது.

அதேவேளை மறுமுனையில், புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து ரஷ்ய விண்வெளி வீராங்கனையான அன்னா கிகினா, இரண்டு அமெரிக்க விண்வெளி வீரர்கள் மற்றும் ஒரு ஜப்பானிய விண்வெளி வீரருடன் "ஸ்பேஸ்எக்ஸ் க்ரூ டிராகன்" விண்கலத்தில் விண்ணில் சுற்றுப்பாதை ஆய்வகத்திற்குச் செல்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் விண்வெளி பயணங்களுக்காக விண்வெளி நிலையத்தில் சரியான பயிற்சி பெற்ற குழு உறுப்பினர்கள் ஒருங்கிணைந்த குழுவாக விண்வெளி நிலையத்துக்கு செல்வது அவசியமாகிறது" என்று நாசா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த விண்வெளி நட்புறவு ஒப்பந்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்பு, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினால் ரோஸ்கோஸ்மோஸின் தலைவரான டிமிட்ரி ரோகோசினுக்குப் பதிலாக, முன்னாள் துணைப் பிரதமரும் துணைப் பாதுகாப்பு மந்திரியுமான யூரி போரிசோவ் என்பவர் நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா மீதான பொருளாதார தடை :

உக்ரேனிய போரின் பின்னர், அமெரிக்க பொருளாதார தடையால் சர்வதேச விண்வெளி நிலையம் கீழே விழும் நாள் தொலைவில் இல்லை என ரஷ்யா பகிரங்கமாக கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்து இருந்தது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் விதித்துள்ள பொருளாதார தடையால் சர்வதேச விண்வெளி நிலையம் பாதிக்கப்பட்டதாகவும், அது கடலிலோ அல்லது நிலத்திலோ விழுந்து சேதமடையப் போகிறது என்று ரஷ்யா எச்சரித்தும் இருந்தது.

பேஸ்புக், கொக்க கோலா, பெப்சி கோலா, மக்டோனால்ஸ் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களும் ரஷ்யா மீது பல்வேறு வகையான தடைகளை விதித்து இந்தப் போரில் ரஷ்யாவுக்கு எதிரணியில் இணைந்துள்ளன. உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன. மேலும் உக்ரைனுக்கு ஆயுதம், பணம் உள்ளிட்டவற்றையும் கொடுத்து உதவி வருகின்றன. இருப்பினும் ரஷ்யா சற்றும் பலம் தளராமல் அண்டை நாடான, இன்னொரு பொருளாதார வல்லரசான சீனாவின் உதவியுடன் இந்த தடைகளை சமாளித்து வருகிறது.

கடந்த ஏப்ரலில் சர்வதேச விண்வெளி நிலையத்தை முன் வைத்து அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு பாரிய அழுத்தம் கொடுத்து ரஷ்யா நெருக்கடிக்கு உள்ளாக்கியது. ரஷ்யா தன்வேலைகளை நிறுத்தி விட்டால் விண்வெளி நிலையம் அதோ கதிதான் என்று மிரட்ட ஆரம்பித்தது. இதனால் சர்வதேச விண்வெளி நிலையம் என்னாகும், கீழே விழுமா அல்லது அமெரிக்கா ஏதாவது முயற்சி எடுத்து அதைக் காப்பாற்ற முயலுமா என்ற கேள்விகள் எழுந்தது.



சோவியத் பிளவின் முன்னரே அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகள் இணைந்துதான் சர்வதேச விண் வெளி நிலையத்தை பராமரித்து வருகின்றன. ஒவ்வொரு நாடும் விண்வெளி நிலையத்தின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து வருகிறது. இதில் ரஷ்யா தனது வேலைகளை நிறுத்தப் போவதாக கூறியது விண்வெளி நிலையத்தின் எதிர்காலம் குறித்த கேள்வியை எழுப்பி யது.

பூமியில் போர், விண்வெளியில் நட்பு:

பூமியில் இரு வல்லரசுகளும் உக்ரேனிய போரால் முரண்பட்டுக் கொண்டிருக்க, விண்வெளியில் இரு நாடு களைச் சேர்ந்த வீரர்கள் நட்புடன் ஒன்றாகவும், வலம் வந்தனர்.

இதனாலேயே கடந்த சில மாதமாக ரஷ்யாவின் போர் தாக்குதலை விமர்சிக்காமல் நாசா தவிர்த்தும் வந்தது.அத்துடன் இந்தப் போர் காரணமாக விண்வெளியில் தங்களது பணிகளில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் நாசா தெரிவித்திருந்தது.

ரஷ்ய விண்கலத்தில் சென்ற அமெரிக்கா வின் நாசா விண்வெளி வீரர் மார்க் வன்டே ஹெய், கடந்த ஏப்ரல் இறுதியில் பூமிக்கு திரும்பினார். அவர் மட்டுமல்ல, அவருடன் இரண்டு ரஷ்ய விண்வெளி வீரர்களும் கஜகஸ்தானில் தரையிறங்கினர். மொத்தம் 355 நாட்களை விண்வெளியில் சுற்றிவிட்டு திரும் பினார் மார்க். இவருடன் சென்ற ரஷ்ய விண்வெளி வீரர்களின் ஆன்டன் ஷ்கப் லெரோவ் மற்றும் பியோடிர் துப்ரோவ் ஆகும். இவர்கள் மூவரும் ரஷ்ய போர் விமானத்தில் மீள வீடு திரும்பினர்.

பூமியின் 5,680 சுற்றுப்பாதைகளின் பயணத்திற்குப் பிறகு, 150 மில்லியன் மைல்களுக்கு மேல் பயணித்த வந்த மார்க்கை நாசா விமான மருத்துவர்கள், பொது விவகார அதிகாரிகள் மற்றும் விண்வெளி வீரர் அலுவலகம் மற்றும் விண்வெளி நிலைய நிர்வாகத்தின் பிரதிநிதிகள் வரவேற்றனர். அங்கிருந்து காரகண்டா நகருக்கு ரஷ்ய போர் விமானத்தில் 3 விண்வெளி வீரர்களும் அழைத் துச் செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து, அமெரிக்க விண்வெளி வீரர் நாசா ஜெட்டில் அமெரிக்கா புறப் பட்டுச் சென்றார்.

விண்ணில் இரு நாட்டு நட்புறவு :

இவ்வாறாக விண்ணில் இரு நாடுகளும் நட்புறவை பேணிக் கொண்டிருக்கும் வேளையில், மண்ணில் ரஷ்யா மேற்கத்திய நாடுகளிடமிருந்து தடைகள், கண் டனங்களை எதிர்கொண்டு வருகிறது. உலக நாடுகளி டையே தனிமைப்படுத்தலையும் எதிர்கொண்டுள்ளது. அமெரிக்க அதிர் ஜோ பைடன், உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பிற்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினை வன்மையாகக் கண்டித்தும் உள்ளார்.

இரு நாடுகளின் முறிந்த உறவால், இனி வரும் காலங்களில் நாசாவுக்கு ரஷ்ய விண்வெளி ஆய்வு மையத்துக்குமான நல்லுறவு எப்படி இருக்கும் என கவலை கொண்டனர். விண்வெளி வீரர்களின் பாதுகாப்பிற்காகவும், ரஷ்யா- நாசாவிற்கும் எங்கள் சர்வதேச கூட்டாளர்களுக்கும் இடையிலான உறவு தொடர்கிறது" என்று நாசா நிர்வாகி பில் நெல்சன் தெரிவித்தார்.

அதேவேளை இப்போர் முரண்பாடுகளால் ரஷ்ய ராக்கெட்டை நம்பி இருக்கும் செவ்வாய் கிரகத்திற்கான ரோவர் பயணத்தை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் ஒத்திவைத்ததும் அறிந்ததே.

சோவியத் ஒன்றிய உடைவின் பின்னர் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் மாஸ்கோவிற்கும் வாஷிங்டனுக்கும் இடையே பனிப்போருக்குப் பிறகு நட்புறவின் அடையாளமாக இருந்தது.

அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா, ஜப்பான் மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு இடையேயான கூட்டு முயற்சியான சர்வதேச விண்வெளி நிலையத்தின் சுற்றுப்பாதை கட்டுமானம் 1998 ஆம் ஆண்டும் தொடங்கியது. அத்துடன் ரஷ்யாவை சர்வதேச சமாதான ஒத்துழைப்பிற்காக இழுத்து கொண்டு வந்ததும் விண்வெளி பயணத் திட்டங்களின் மூலமாகவே.

நாசா மற்றும் ரோஸ்கோஸ்மோஸ் இடையேயான புதிய ஒப்பந்தத்தின் கீழ், முதல் ஒருங்கிணைந்த விண்கலங்கள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் அனுப்பப்படவுள்ளது. அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா மற்றும் ரஷ்ய விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் இடையே புதிய ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானதன் மூலம் இருநாடுகளும் விண்வெளி நிலைய விமானங்களைப் பகிர்ந்து கொள்ள உடன்பாட்டை எய்துள்ளனர்.

உண்மையில் பூமியில் இரு வல்லரசுகளும் கீரியும் பாம்புமாக தான் இருந்தாலும், விண்வெளியில் பரஸ்பர நட்புறவை இரு நாடுகளும் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கதே.

# சுமந்திர சீற்றம்!

ப. தெய்வீகன்

இலங்கையில் போருக்குப் பின்னரான தமிழ்த் தேசியப் போராட்டத்தில் - கடந்த பதின்மூன்று வருடங்களாக - ஆளுமை மிக்க அரசியல் பங்களிப்பை வழங்கிவந்தவர் சுமந் திரன். உரிமை - தேசியம் என்பவை குறித்தெல்லாம் எழுத்துக்கூட்டிப் பேசுவதற்கே சக்தியற்றவர்களாக தமிழ் மக்கள், சகல தளங்களிலும் வலுவிழந்திருந்த காலகட்டத்தில் தனது துறைசார் வல்லமையாலும் நிதானமான அணுகுமுறை களினாலும், தமிழ் தேசிய அரசியலுக்கு வலுச்சேர்த்தவர்.

யாழ்ப்பாணத்தில் எங்கோ ஒரு மூலையில் இராணுவ ஆக்கிர மிப்பினால் காணி பறிபோகும் போதும் சரி, நினைவேந்தல் செய்வதற்கு பொலிஸ் வாகனம் குறுக்கே வந்து நின்றபோதும் சரி, சிறையிலுள்ள அரசியில் கைதிகளுக்காக வாதிடவேண் டியபோதும் சரி, தமிழ் மக்களுக்கான குரலாக பன்னாட்டு அரங்குகளிலும் பேசவேண்டிய போதும் சரி,கொழும்பில் சிங்களத் தரப்புக்களிடம் உரையாடவேண் டிய தருணங்களிலும் சரி, எல்லாக் களங்களிலும் சுமந்திரனின் பங்களிப்பு மிகக் காத்திரமாக இருந்துவந்திருக்கிறது. ஆள் கணக்கிற்கு, தமிழ் தரப்பிலிருந்து சென்று, பேசிவிட்டு வராமல், தமிழ் மக்களின் பிரச்சினைகளை யதார்த்த பூர்வமாக அணுகியவர். அதனை மக்களிடம் வெளிப்படையாக எடுத்துச் சொல்லி, தனது நிலைப்பாட்டிலுள்ள தர்க்க நியாயங்களை விளக்கியவர். ஏன் சிங்கள மக்களிடமும் ஊடகங்களிடமும்கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளை தெளிவாக எடுத்துச் சொன்னவர்.

மொத்தத்தில் அவரது முயற்சிகளில் - அரசியலுக்கே உரிய சிறிய சறுக்கல்கள் ஆங்காங்கே தென்பட்டாலும் - மிகப் பெரிய முழுமையிருந்தது. அவரது முடிவுகளில் அவரளவுக்கு நம்பிக்கை வைக்குமளவுக்கு மக்களுக்கும் துணி விருந்தது.

ஆனால், கடந்த நான்கு மாதங்களாக கொழும்பில் நடைபெற்றுக்கொண்டி ருக்கும் திருக்கூத்துக்களில், தமிழ் மக்கள் சார்பில் ஒரு உறுப்பினராக அங்கு நின்றுகொண்டு சுமந்திரன் செய்கின்ற காரியங்கள், எல்லை மீறுகின்றனவோ என்று எண்ணத்தோன்றுகிறது. இது, அவர் இவ்வளவு காலமும் தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பிய பல நம்பிக் கையின் மீது நஞ்சூட்டிவிடக்கூடிய ஆபத்தும் தெரிகிறது.

பல விடயங்களை சுருள் சுருளாக எடுத்து விவாதிக்கக்கூடிய சம்பவங்களிருப்பினும், சுமந்திரனின் சிக்கலான அரசியல் கோபம் ஆரோகணித்த, ரணில் பிரதமராகப் பதவியேற்ற புள்ளியிலிருந்து பார்ப்போம் -

காலிமுகத்திடல் போராட்டம் கொதிநிலையை எட்டியிருந்த நிலையில், மகிந்த பதவி விலகுகிறார். "புதிய பிரதமராகப் பதவியேற்பதற்கு யாராவது வரலாம்" - என்று கோட்டபாய அழைப்பு விடுக்கிறார். ரணில் சென்று பதவியைப் பெற்றுக்கொள்கிறார். திட்டம் பிழைத்துவிட்டது என்று தூக்கத்திலிருந்து எழுந்த சஜித் "இல்லை இல்லை..எனக்குப் பிரதமர் பதவி வேண்டும்" - என்று கோட்டபாயவுக்கு கடிதம் அனுப்புகிறார். அதனைப் புறங்கையால் தட்டிவிட்டு, ரணிலுக்குப் பிரதமர் பதவியை வழங்கி, கோட்டாவின் பட்டாபிஷேகம் சிறப்பாக நடந்து முடிந்துவிடுகிறது.

இன்று தலைகீழாக மாறியிருக்கும் இலங்கை அரசியலில், அச்சாணி மாற்றப்பட்ட தருணம் அதுதான். கோட்டபாயவின் கட்டிலில் போய் படுத்திருந்து செல்பி எடுத்த சின்னப் பெடியனிடம் கேட்டால்கூட இதைச் சொல்வான்.

சரி, ரணில் சென்று பதவியேற்றிருக்காவிட்டால், சஜித் பதவியை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராகத்தானே இருந்தார்? அப்படியே, அவர் பிரதமர் பதவியை எடுத்திருந்தால், அடுத்து என்ன நடந்திருக்கும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையில்லாத சஜித், தேசிய அரசாங்கம் ஒன்றுக்குச் சென்றிருக்க வேண்டும். அப்படிச் சென்றால், கோட்டா இப்போதும்தான் ஜனாதிபதியாக இருந்துகொண்டிருப்பார். இல்லையா?

அதை ஏன் இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறதென்றால், தென்னிலங்கை அரசியல் தொழுவத்தில் சாணி படாமல் பால் கறக்கவேண்டுமென்பது முடியாத காரியம் என்பது, சுமந்திரனுக்கு மிகவும் தெரியும். அப்படியிருக்கும்போது, ரணிலின் மீதான தீராத வன்மத்தினால், சுமந்திரனின் எல்லாக் காரியங்களும் தற்போது சிதறுவதாய் தெரிகிறது. ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில், சஜித் விலகினால் யாருக்கு வாக்களிப்பது என்ற விடயத்தில், தனது சொந்தக் கட்சியினர் பலர் ரணிலின் பக்கம் தாவப் போகிறார்கள் என்று தெரிந்தும்கூட, டலஸ் பக்கம் போய் நின்றுகொண்டது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்? இதில் ரணில் தோற்பாரா - வெல்வாரா என்ற பிரச்சினைக்கு அப்பால், சொந்தக் கட்சி இந்த வாக்கெடுப்பில் பிளந்து தொங்கப்போவதைப் பார்த்து, சந்தி சிரிக்கப்போகிறது என்பதை சுமந்திரன் கொஞ்சமாவது சிந்தித்தாரா?

ரணில் ஒரு தீய சக்தி என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அவரை அகற்றும்வரைக்கும் தூய அரசியல் பாதைக்கு சிறிலங்காவில் வழியே இல்லை என்பது அடுத்த விடயம். ஆனால், அவர் தனது மதிநுட்பத்தினால் - சமயோசித தீர்மானத்தினால், உள்ளே வந்துவிட்டார் என்றால், அதேயளவு மதிநுட்பத்துடன் அவரை டீல் பண்ண வேண்டும் என்பது சுமந்திரனுக்கு அறவே தெரிந்திருக்கவில்லை. மாறாக, ரணிலின் மீதான வன்மத்தை அளவுக்கு அதிகமாகவே தனிப்பட்டமுறையில் எடுத்துக்கொண்டார். பேட்டிகள், ருவிட்டர் என்று எங்கு பார்த்தாலும், ரணிலுக்கு எதிராக சுமந்திரன் தீவெட்டிகளுடன் நின்றுகொண்டிருந்தார். ரணிலை "அரகல" காரர்களே மன்னித்தாலும், சுமந்திரன் மன்னிக்கமாட்டார் போலுள்ளது என்றவுக்கு, சுமந்திரனின் கோபம் "கோல் பேஸ்" தாண்டி எரிகிறது.



### ஏன் இந்தப் பதற்றம்?

சுமந்திரன் யார்? யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். ஆக, தனது தொகுதி மக்களின் பிரச்சினைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் அப்பால் - தேசியப் பிரச்சினையிலும் பங்களிப்பு முக்கியம் என்றளவில் - ஒரு குறிப்பிட்ட தூரத்துக்குத் தனியாக ஓடலாம். ஆனால், ரணில் விடயத்தில், அவர் ஓடிய ஓட்டத்தில் தானும் கோமாளியாகிக் கூட்டமைப்பையும் கோமாளிக்கட்சியாகிவிட்டார். இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், தமிழசுக்கட்சியின் எதிர்காலத்தை நாடாளுமன்ற வளாகத்திலேயே வெட்டிப் புதைத்திருக்கிறார். (அதற்காக, இங்கு கூட்டுப்பொறுப்பினை மீறி, இரகசிய டீல்களுடன் ரணிலுக்கு வாக்களித்தவர்களுக்கு எந்த அங்கீகாரத்தையும் வழங்கிவிடல்லை)

### இப்போது எஞ்சியிருப்பது என்ன?

எந்த நேரமும் தாங்கள் நினைத்தபடி மதில் பாயலாம் என்ற முடிவோடு "வீட்டுக்குள்ளிருந்துகொண்டு" வெளியே பார்த்துக்கொண்டிருக்கும், தமிழ்த் தேசியக் கம்பனி. விக்னேஸ்வரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்ததுபோல, மாறி வாக்களித்தவர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுப் பதற்கு, கூட்டமைப்பின் எம்பிக்கள் கூட்டம் கூடினால், அவர்கள் எல்லோ ரும் சேர்ந்து சுமந்திரனை வெளியே போட்டுவிடுகின்ற நிலைதான் உள்ளது. ஆனால், சுமந்திரன் சளைக்கவில்லை.

ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்றபிறகும் - சஜித்தேகூட ரணிலைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து கைகுலுக்கிக்கொண்டி ருக்கும்போது - ரணிலை எள்ளி நகையாடும் கார்ட்டூன்களைப் பகிர்ந்தபடி, காலி முகத்திடலில் எஞ்சியிருக்கும் சில நூறுபேர்தான் தனது இலட்சியப் போராட்டத்தின் இறுதி வேங்கைகள் என்று சீறிக்கொண்டிருக்கிறார். நடைபெற்று முடிந்தது புரட்சியொன்றுமல்ல, வெறும் "பசிப்போராட்டம்" என்பதை நம்ப மறுத்துக்கொண்டு - கப்பலில் வரப்போகும் சாமான்களுடன் தென்னிலங்கையர்கள் அவரவர் வீட்டுக்குப் போகப்போகிறார்கள் என்ற உண்மையை நம்ப மறுத்துக்கொண்டு - ரணிலைப் பதவியால் இறக்கவேண்டும் என்று கொதித்துக்கொண்டிருக்கிறார்.

**சரி கடைசியாக ஒரு கேள்வி -**


"நான் வன்முறையை நம்பாதவன் - ஆயுதப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்காதவன்" - என்றெல்லாம் இவ்வளவு காலமும் சொன்ன சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களது வீடுகளையும் ஜனாதிபதி மாளிகையையும் அடித்தவர்கள் - எரித்தவர்கள், முறைசாரா போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்று ஆயிரக்கணக்கானவர்கள் கரைந்துபோயுள்ள ஒரு குழுவின் பக்கம் எவ்வாறு தனது ஆதரவை அள்ளிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்? அவர்களை சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டும் என்று ஒப்புக்காவது அறிக்கையொன்றைக் காணவில்லையே. அவர்களுடனான சந்திப்பில் "எங்களால் பேச மட்டும்தான் முடியும், நீங்கள்தான் செயலில் முடித்துக்காட்டியவர்கள், ஆகவே, இதையும் செய்யவேண்டும்" - என்று சுமந்திரன் சொன்ன அந்த "செயல்" என்ன? அந்தச் செயலைத் தானே புலிகளும் செய்தார்கள். ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பு. என்ன தவறு?

ஜீ.எல். பீரிஸ் ஒரு சிறந்த கல்விமான். ஆனால், அவர் அரசியலுக்கு வந்து தனது மதிப்பையும் மண்டையையும் தொலைத்தார். எது சரி - பிழை என்று நன்கு தெரிந்தும்கூட, மகா முட்டாள்களுக்கு இன்று ஜால்ரா அடித்துக் கொண்டிருக்கிறார்.


பீரிஸ் போல மாண்டுவிடாது, முன்னர் தனக்கிருந்த அரசியல் ஆளுமையை மீட்டெடுத்துக்கொண்டு குத்துமதிப்பிலாவது சுமந்திரன் மீள்கிறாரா பார்க்கலாம். ●


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?

1) 2) 3)




38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3  4  3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..............................

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..............................

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..............................

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..............................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..............................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..............................

(6 புள்ளிகள்)

**02)** அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..............................

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

37. 1 38. 2 39. 1 40. 2

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1 — 25.07.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2 — 25.07.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# கூட்டமைப்பின் எம்.பிக்கள் கட்சி முடிவை மீறமாட்டார்கள்!

## கருணாகரம் எம். பி.

மட்டக்களப்பு, ஜூலை 25

**“ஜனாதிபதி தெரிவின் போது கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரும் கட்சியின் முடிவை மீறி வாக்களித்திருப்பார்கள் என நம்பவில்லை. அதிலும் குறிப்பாக, போராட்ட பின்னணியுடைய அமைப்புக்களின் எம்.பிக்கள் அதை செய்திருக்க மாட்டார்கள்” இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.**



கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவி வாக்களித்திருக்கலாமென எழுந்த குற்றச்சாட்டு தொடர்பில் அவரிடம் வினவியபோதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் சில உறுப்பினர்கள் கட்சியின் தீர்மானத்தை மீறி வாக்களித்தனர் என்று கூறப்படுவது அபாண்டமானது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தீர்மானத்தை மீறி யாராவது வாக்களித்திருப்பார்கள் என நான் நினைக்கவில்லை.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அபாண்டமானவை. இந்த குற்றச்சாட்டுக்கள் எழுவதற்கு கூட்டமைப்பின் 3 உறுப்பினர்களே காரணம். ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானிக்கும் கட்சி கூட்டத்தில்இ 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் நடுநிலை வகிக்க வேண்டுமெனக் கூறினார்கள்.

ஆனால்இ 3 பேர் டலஸை ஆதரிக்க வேண்டுமென்றனர். கூட்டமைப்பின் கூட்டத்துக்கு டலஸை அழைத்து வந்தார்கள். டலஸை ஆதரிக்க வேண்டுமென சில காரியங்கள் நடந்ததாலும், டலஸை ஆதரிக்கும்படி முக்கிய நாடொன்று சொன்னதாக - தொலைபேசியில் சொல்லப்பட்டதாகக் கூறப்பட்டதாலும் டலஸை ஆதரிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடுநிலை வகிக்கும் நிலைப்பாடு எடுக்கப்பட்டிருந்தால் இந்த குழப்பங்கள், சந்தேகங்கள் ஏற்பட்டிருக்காது. டலஸ் அழகப்பெருமவை பெரமுனவை சேர்ந்த 37 பேர் ஆதரிக்கின்றனர் என்று கூறப்பட்டது. அவர்களில் பலரை இரவிரவாக மகிந்த ராஜபக்ஷ பேசியும், மிரட்டியும் தமது பக்கம் இழுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நீண்டகாலம் ஐ. தே. கவில் இருந்தவர்கள். அங்குள்ள வலுவான தொடர்புகள் மூலம், அவர்களும் மாறி வாக்களித்திருப்பார்கள். இந்த இரண்டு காரணங்களாலேயே டலஸின் வாக்குகள் குறைந்திருக்கும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்கள் யாரும் கட்சி மீறி வாக்களித்திருக்க வாய்ப்பில்லை. அதிலும் குறிப்பாக, போராட்ட பின்னணியுடைய அமைப்புக்களின் எம்.பிக்கள் அதை செய்திருக்க மாட்டார்கள். நாம் யாருக்கும் வாக்குறுதியளித்தால் அதை நிறைவேற்றிய தீருவோம் - என்றார்.

# யானைக்கு வைத்த மின் வேலி முதியவர் உயிருக்கு எமனானது

மட்டக்களப்பு, ஜூலை 25

யானைக்கு வைத்த மின்சார வேலியில் சிக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் வவுணதீவு பொலிஸ் பிரிவின் இருநூறுவில் - பாவக்கொடிசேனை பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதில், முதலைக்குடா - கொக்கட்டிச்சோலை பிரதேசத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி (வயது 71) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர்இ நண்பர் ஒருவரின் தோட்டம், மாடு, ஆடுகளை பராமரித்து வருகிறார். இந்நிலையில, நேற்று அதிகாலை தோட்டத்தைப் பாதுகாக்கும் பொருட்டு யானைகளுக்கு வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என்று சம்பவத்தை கண்ட கிராமவாசி ஒருவர் பொலிஸாருக்கு தெரிவித்தாரென பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான பீற்றர் போலின் உத்தரவிற்கமைவாக சம்ப இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன், பிரேத பிரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# எரிபொருளுக்காக காத்திருந்த சமுர்த்தி உத்தியோகத்தர் பலி!

பொத்துவில், ஜூலை 25

எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த சமுர்த்தி உத்தியோகத்தர் பொத்துவிலில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுனதினம் இடம்பெற்றதாகப் பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை - பொத்துவில் - லகுகலையைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தரான திஸநாயக்க (வயது 51) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

பொத்துவில் கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னாள் பெற்றோல் பெறுவதற்காக சம்பவ தினமான காலை முதல் காத்திருந்த அவர் திடீரென மயக்கமுற்று கீழே வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்நபர், ஏற்கனவே இருதய சத்திர சிகிச்சை மேற்கொண்டவர் எனவும் சடலம் பிரேத பரிசோதனைக்காக பொத்துவில் ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு இடமாற்றம் வழங்க வேண்டாம்!

## அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

திருகோணமலை, ஜூலை 25

கிழக்கு மாகாணத்தில் மாகாண சபை நிர்வாகத்துக்குட்பட்ட அரச திணைக்களங்களில் கடமையாற்றும் 60 வயதை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களை வருடாந்த இடமாற்றத்துக்கு உட்படுத்த வேண்டாமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்துக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதில், அரச உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வுக்கான வயது எல்லைஇ கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் 65ஆக நீடிக்கப்பட்டு, இது தொடர்பாக அரச நிர்வாக சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டு, அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 60 வயதை பூர்த்தி செய்த அலுவலர்களை இடமாற்றம் செய்யலாமென சுற்றறிக்கையில் தெரிவிக்கவில்லை. மேலும், தற்போது மிக இக்கட்டான காலகட்டத்தில் வாழ்க்கை செலவும் அதிகரித்துள்ள நிலையில், இவ்வாறான இடமாற்றத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதை நிறுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ள நிலையில், அநேகமானவர்கள் நோயாளிகளாக உள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவேஇ 60 வயதுக்கு மேற்பட்டவர்களை இடமாற்றம் செய்வதை நிறுத்திஇ அந்தந்த அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்ததாகக் கூறினார். (ஐ)

# தராசில் சுழன்று விளையாடிய சிறுவன் கயிறு இறுகி மரணம்!

மட்டக்களப்பு, ஜூலை 25

வீட்டில் கட்டப்பட்டிருந்த தராசுக் கயிற்றில் சுழன்று விளையாடிய சிறுவன் கயிறு கழுத்தில் இறுகியதில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு பாரதி வீதியில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். இதில், மதிவாணன் ஜனுசன் (வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

வீட்டின் முற்றத்தில் பொருட்களை நிறுப்பதற்கான தராசுக்காக நைலோன் கயிறு கட்டப்பட்டிருந்தது. தாயார் வீட்டின் உள்ளே இருந்த நிலையில், சிறுவன் தராசுக் கயிற்றில் சுழன்று விளையாடியுள்ளார். இதன்போது கயிறு கழுத்தில் இறுகி உயிரிழந்தார் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிறுவனின்சடலம்பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வெல்லாவெளி எரிபொருள் நிலைய செயல்பாடுகளால் மக்கள் அதிருப்தி!

மட்டக்களப்பு, ஜூலை 25

மட்டக்களப்பு வெல்லாவெளியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உரிய நேரத்தில் எரிபொருள் வழங்கப்படுவதில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையத்தில், கடந்த வெள்ளிக்கிழமை பெற்றோல் முடிவடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில், நள்ளிரவு 12 மணியின் பின்னர் பெற்றோல் கலன்களில் வழங்கப்பட்டபோது பொதுமக்களால் சுற்றி வளைக்கப்பட்டது.

வெல்லாவெளி எரிபொருள் நிலையத்தில் இடம்பெறும் இந்தச் செயலை பிரதேசசெயலாளர் கடமையில் இருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கண்டும் காணாமல் செயல்படுகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்காக பவுசரில் வந்த டீசல் ஒரு ஏக்கருக்கு 15 லீற்றர் என வரையறை உள்ள போதும் தற்போது 10 லீற்றர் மாத்திரமே வழங்கப்படுகின்றது என்றும் கூறப்பட்டது.

இதேநேரம்இ வழங்கப்பட்ட எரிபொருள்கூட தற்போது விவசாயிகளுக்கு வழங்காமல் நிறுத்தப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ஐ)

# கியூ. ஆர். முறைமை திருமலையில் அமுல்

திருகோணமலை, ஜூலை 25

தேசிய எரிபொருள் அனுமதி அட்டை (கியூ. ஆர்.) முறை மற்றும் வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கம் என்பவற்றை கவனத்தில்கொண்டு பரீட்சாத்தமாக எரிபொருள் விநியோகிக்கும் செயல்பாடு நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாகவுள்ள எரிபொருள் நிலையத்தில் கியூ. ஆர். முறை பரீட்சிக்கப்பட்டு எரிபொருள் விநியோகிக்கப்பட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபர் பி. எச். என். ஜயவிக்ரமவின் அறிவுரைக்கு அமைய தேசிய எரிபொருள் அனுமதி அட்டையை பெற முடியாதவர்களுக்கு இலவசமாக தொழிநுட்ப வசதிகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் உத்தியோகத்தர்களும் கடமையில் அங்கு அமர்த்தப்பட்டு உரிய சேவைகளை வழங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒப்பந்தங்களை மீறி ரஷ்யா தாக்குதல்!

## உக்ரைன் ஜனாதிபதி குற்றச்சாட்டு

கீவ், ஜூலை. 25

**உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் நேற்று 150 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் உக்ரைனின் மத்திய பகுதியில் ரஷ்யா கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளது.**

அங்குள்ள விமானப்படை தளம் மற்றும் ரயில்வே கட்டமைப்பை குறிவைத்து சர மாரியாக ஏவுகணைகளை தாக்குதலை நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே தெற்கு உக்ரைனில் ரஷ்ய படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளை குறிவைத்து உக்ரைன் இராணுவமும் தாக்குதல் நடத்தியுள்ளது.

மேலும் ரஷ்ய படைகளின் நடமாட்டத்தை தடுக்கும் விதமாக தெற்கு கெர்சான் பிராந்தியத்தில் உள்ள டினீப்பர் ஆற்றுபாலத்தை உக்ரைன் வீரர்கள் தகர்த்தியுள்ளனர்.

இதேவேளை, தானிய ஏற்றுமதிக்காக கருங்கடல் பகுதியில் உள்ள உக்ரைனிய துறைமுகங்களை மீண்டும் திறப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகி சில மணி நேரத்துக்குள் கருங்கடல் பகுதியில் ரஷிய படைகள் தாக்குதல் நடத்தியுள்ளது.

கருங்கடல் துறைமுகத்தில் தாக்குதல் நடத்தியமை ஒப்பந்தத்தை மீறும் நடவடிக்கை என உக்ரைன் ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ள அதேநேரம் ரஷ்யாவிற்கு ஐ.நா.கடும் கண்டனமும் தெரிவித்துள்ளது. (அ)

# பிரேஸிலில் பொலிஸாரின் தேடுதலின்போது மோதல்!

## 18 பேர் துப்பாக்கிச் சூட்டில் பலி!

பிரேசிலியா, ஜூலை. 25

பிரேசில் - ரியோ டி ஜெனிரோ நகருக்கு அருகே பிரேசிலிய பொலிஸார் நடத்திய திடீர் சோதனையின் போது குற்றக் கும்பலைச் சேர்ந்த 16 பேர் உட்பட குறைந்தது 18 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ரியோ டி ஜெனிரோ - காம்ப்ளெக்ஸோ டோ அலெமாவோவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குற்றக் குழுக்களைச் சேர்ந்த 16 பேருடன், சட்ட அமுலாக்க அதிகாரி மற்றும் ஒரு பெண்ணும் உயிரிழந்ததாக பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

ரியோடி ஜெனிரோ நகருக்கு அருகேயுள்ள பகுதியில், கார் திருட்டு, வங்கி கொள்ளை, கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் பதுங்கி உள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்திற்கு ஹெலிகப்டரில் விரைந்து அதிரடி தாக்குதல் நடத்தினர். விலா குரூசிரோ என்ற இடத்தில் மறைந்திருந்த கடத்தல்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

குற்றவாளிகளில் பலர் பொலிஸ் உடையணிந்து தாக்குதல் நடத்தினர். இதையடுத்தே, அவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். நாங்கள் குற்றங்களுக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம். மக்களுக்கு அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் பணியிலிருந்து பின்வாங்க மாட்டோம் என ரியோ டி ஜெனிரோ ஆளுநர் கிளாடியோ காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார். (அ)

# உக்ரைனுக்கு 270 மில்லியன் டொலர்கள் பாதுகாப்பு உதவி வழங்கும் அமெரிக்கா!



நியூயோர்க், ஜூலை. 25

உக்ரைனுக்கு கூடுதல் 270 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பாதுகாப்பு உதவியை, அமெரிக்கா அனுப்பும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இதில், நடுத்தர தூர ரொக்கெட் அமைப்புகள் மற்றும் தந்திரோபாய ஆளில்லா விமானங்கள் உள்ளடங்கும்.

இந்த அறிவிப்பு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தால் உக்ரைனுக்கு அளிக்கப்பட்ட மொத்த அமெரிக்க பாதுகாப்பு உதவியை 8.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் கொண்டு வருகின்றது.

மேலும், மே மாதம் காங்கிரஸால் அங்கீகரிக்கப்பட்ட உக்ரைனுக்கான பொருளாதார மற்றும் பாதுகாப்பு உதவியாக 40 பில்லியன் அமெரிக்க டொலர்களாக செலுத்தப்படுகிறது.

புதிய தொகுப்பில் நான்கு ஹை மொபிலிட்டி ஆட்லரி ரொக்கெட் சிஸ்டம்கள் அல்லது ஹிமார்ஸ் மற்றும் 580 ஃபீனிக்ஸ் கோஸ்ட் ட்ரோன்கள் வரை உக்ரைனுக்கு வாங்க அனுமதிக்கும்.

இவை இரண்டும் முக்கியமான ஆயுத அமைப்புகளான உக்ரைனியர்களை ரஷ்ய பீரங்கி மேலாதிக்கம் இருந்தபோதிலும் சண்டையில் இருக்க அனுமதித்துள்ளது என்று மூலோபாய தகவல்தொடர்புகளுக்கான வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு சபையின் ஒருங்கிணைப்பாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

சமீபத்திய உதவியில் சுமார் 36,000 பீரங்கி வெடிபொருட்கள் மற்றும் ஹைமார்ஸ்க்கான கூடுதல் வெடிமருந்துகளும் அடங்கும்.

உக்ரைன் அரசாங்கத்திற்கும் அதன் மக்களுக்கும் நாங்கள் தொடர்ந்து ஆதரவளிக்கப் போகிறோம் என்பதில் ஜனாதிபதி தெளிவாக இருக்கிறார் என்று கிர்பி மேலும், கூறினார். (அ)

# ரஷ்யாவுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிய லிதுவேனியா!

ரஷ்யாவின் கலினின்கிராட் பகுதிக்கு உள்ளேயும் வெளியேயும் அனுமதிக்கப்பட்ட பொருட்களை இரயில் கொண்டு செல்வதற்கான தடையை லிதுவேனியா நீக்கியுள்ளது.

கலினின்கிராட் பால்டிக் கடலில் உள்ளது மற்றும் பயணிகள் மற்றும் சரக்குகளுக்கு லிதுவேனியா வழியாக ரஷ்யாவிற்கு ரயில் இணைப்பைப் பயன்படுத்துகிறது.

கடந்த மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகளின் கீழ் எஃகு மற்றும் பிற இரும்பு உலோகங்களின் போக்குவரத்தை லிதுவேனியா தடை செய்தபோது ரஷ்யா கோபமடைந்தது.

மேலும் லிதுவேனியா விதித்துள்ள தடையை உடனடியாக மீள பெறாவிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என ரஷ்யா எச்சரித்தது.

ஆனால், இப்போது லிதுவேனியன் ரயில்வே எக்ஸ்கிளேவுக்கு பொருட்களை கொண்டு செல்வதை மீண்டும் தொடங்கும் என்று கூறியுள்ளது.

கடந்த வாரம் ஐரோப்பிய ஒன்றியம், போக்குவரத்துத் தடையானது வீதியை மட்டுமே பாதித்தது, இரயில், போக்குவரத்து அல்ல, லிதுவேனியா ரஷ்யாவை ஐரோப்பிய ஒன்றியப் பகுதி முழுவதும் கலினின்கிராட் வரை கான்கிரீட், மரம் மற்றும் மதுவை அனுப்ப அனுமதிக்க வேண்டும் என்று கூறியது.

ரஷ்யாவின் டாஸ் செய்தி நிறுவனம், கலினின்கிராட் அரசாங்க அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி, 60 வேகன் சிமெண்ட் விரைவில் பிராந்தியத்திற்கு அனுப்பப்படும் என்று கூறியது.

1945ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ரஷ்யா கலினின்கிராட்டை இணைத்துக் கொண்டது மற்றும் சுமார் ஒரு மில்லியன் மக்கள் அங்கு வாழ்கின்றனர்.

விநியோகத்திற்காக, கலினின்கிராட் லிதுவேனியா வழியாக செல்லும் போக்குவரத்து வழிகளை பெரிதும் நம்பியுள்ளது. ஆனால் கடந்த மாதம் லிதுவேனியா ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பிற்கு பதிலடியாக கட்டுமான பொருட்கள் உட்பட சில ரஷ்ய பொருட்களின் மீது ஐரோப்பிய ஒன்றிய தடைகளை அமுல்படுத்தத் தொடங்கியது.

லிதுவேனியன் பிரதேசத்தின் வழியாக கலினின்கிராட் வரை பொருட்களை கொண்டு செல்ல இது அனுமதிக்காது. இது ரஷ்யாவை கோபப்படுத்தியது. (அ)

# லிஸ் ட்ரஸ்க்கு அதிக ஆதரவு!

லண்டன், ஜூலை. 25

பிரித்தானியாவில் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும் நடைபெறும் போட்டி தொடர்பாக நடைபெற்ற கருத்துக் கணிப்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் லிஸ் ட்ரஸ்ஸுக்கு அதிக வாக்காளர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

730 கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்களிடையே 'யுகவ்' ஆய்வு அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பில் லிஸ் ட்ரஸ்ஸுக்கு 62 சதவீதத்தினரும் ரிஷி சுனக்குக்கு 38 சதவீதத்தினரும் ஆதரவு தெரிவித்தனர்.

பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் பதவி விலகியதைத் தொடர்ந்து, ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியில் பிரதமர் பதவிக்கான போட்டியில் 2க்கும் அதிகமான வேட்பாளர்கள் களமிறங்கினர்.

2 க்கும் அதிகமான வேட்பாளர்கள் களம் இறங்கியதால் 2 கட்டங்களாக தேர்தல் நடத்தப்படுகிறது. அந்த வகையில் முதல் கட்ட தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு சுற்றுகளாக வாக்களித்து போட்டியிட்ட 8 பேரில் 2 பேரை இறுதி வேட்பாளர்களாக தேர்வு செய்தனர்.

இதன்படி முன்னாள் திறைசேரியின் தலைவர் ரிஷி சுனக் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் லிஸ் ட்ரஸ் ஆகிய இருவரும் இறுதி வேட்பாளர்களாக தேர்வாகியுள்ளனர்.

இவர்கள் இருவரில் ஒருவரை கட்சியின் தலைவராகவும், பிரதமராகவும் கன்சர்வேட்டிவ் கட்சியின் சுமார் 2 இலட்சம் உறுப்பினர்கள் வாக்களித்து தேர்வு செய்வார்கள். அதற்கான தேர்தல் ஒகஸ்ட் 4ஆம் திகதி முதல் செப்ரெம்பர் முதல் வாரம் வரை நடைபெறுகின்றது.

கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இடையே நடந்த முதல் கட்ட தேர்தலில் அனைத்து சுற்றுகளிலும் ரிஷி சுனக் முதல் இடத்தை பிடித்ததால் அவர் பிரதமராக தேர்வு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் தற்போதைய நிலவரத்தின்படி கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்களிடையே ரிஷி சுனக்கை காட்டிலும், லிஸ் ட்ரஸ்சுக்கே அதிக ஆதரவு உள்ளது. (அ)

## குரங்கு அம்மை;

# உலகளாவிய ரீதியில் அவசர நிலை பிரகடனம்!

மங்கி பொக்ஸ் என அழைக்கப்படும் குரங்கு அம்மை வைரஸ் வேகமாகப் பரவி வருவதால் உலகளாவிய சுகாதார அவசர நிலையை உலக சுகாதார அமைப்பு பிரகடனப்படுத்தியுள் ளது.

நோயாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உலக சுகாதார அமைப்பு விடுக் கின்ற எச்சரிக்கை அளவீடுகளில் இது மிக உயர்ந்த குறியீடு ஆகும். அம்மை வைரஸ் தொடர்பாக ஆராய் வதற்காக சுகாதார அமைப்பின் நெருக்கடிகாலக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

சுமார் 75 நாடுகளில் 16 ஆயிரம் தொற்றாளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவர் உயிரிழந்தனர் என்று அந்த அமைப்புக் கூறியுள்ளது. குரங்கு அம்மை வைரஸ் சர்வ தேச ரீதியான கவலைக்குரிய பொதுச் சுகாதார அவசர நிலையை எட்டியுள்ளது என்றும் அவர் அறிவித்திருக்கிறார். (அ)

# பாகிஸ்தானுடனான டெஸ்ட் இலங்கை அணி வலுநிலை!



காலி, ஜூலை 25

பாகிஸ்தானுக்கு எதிராக காலி சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தினேஷ் சந்திமால், ஓஷத பெர்னாண்டோவின் அரைச் சதங்களின் உதவியுடன் இலங்கை அதன் முதல் இனிங்ஸில் முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்களை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றது.

தொடரை சமப்படுத்த இந்தப் போட்டியில் வெற்றிபெற வேண்டிய நிலையில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அணித் தலைவர் திமுத் கருணாரட்னவும் ஓஷத பெர்னாண்டோவும் 92 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

சற்று ஆக்ரோஷமான ஆட்டத்திறனை வெளிப்படுத்திய ஓஷத பெர்னாண்டோ 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸ்களுடன் 50 ஓட்டங்களைக் பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்து களம் புகுந்த குசல் மெண்டிஸ் (3) விரைவாகவே ஆட்டமிழந்து சென்றார்.

மறுபுறத்தில் திறமையாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த திமுத் கருணாரட்ன 40 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது தேவையில்லாமல் ரிவேர்ஸ் ஸ்வீப் அடிக்கமுனைந்து ஆட்டமிழந்தார்.

100ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் மூத்த வீரரும் முன்னாள் தலைவருமான அஞ்சலோ மெத்யூஸ் பொறுப்புணர்வுடன் துடுப்பெடுத்தாடி 42 ஓட்டங்களைப் பெற்றார். அவர் 4ஆவது விக்கெட்டில் தினேஷ் சந்திமாலுடன் 75 ஓட்டங்களை பகிர்ந்தார்.

தொடர்ந்து சந்திமாலும் தனஞ்சய டீ சில்வாவும் 5ஆவது விக்கெட்டில் 63 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது தினேஷ் சந்திமால் 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

137 பந்துகளை எதிர்கொண்ட தினேஷ் சந்திமால் 9 பௌண்ட்ரிகளையும் 2 சிக்ஸர்களையும் அடித்திருந்தார்.

கடந்த நான்கு இனிங்ஸ்களில் சந்திமால் தொடர்ச்சியாக குவித்த 4ஆவது அரைச் சதம் இதுவாகும்.

தனஞ்சய டீ சில்வாவும் நிரோஷன் திக்வெல்லவும் அணியை மேலும் பலப்படுத்தும் நோக்கத்துடன் நிதானத்துடன் துடுப்பெடுத்தாட முயற்சித்தனர். ஆனால், தனஞ்சய டீ சில்வா 33 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

முதலாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது நிரோஷன் திக்வெல்ல 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸ் அடங்கலாக 42 ஓட்டங்களுடனும் அறிமுக வீரர் துனித் வெல்லாலகே 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.பாகிஸ்தான் பந்துவீச்சில் மொஹமத் நவாஸ் 71 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

# கவுண்டி கிரிக்கெட்டில் புதிய சாதனை படைப்பு



லண்டன், ஜூலை 25

இங்கிலாந்து நாட்டில் நடைபெற்று வரும் கவுண்டி கிரிக்கெட் போட்டியில் கிளாமோர்கன் அணி 750 ஓட்டங்களை கடந்து சாதனை படைத்துள்ளது.

இங்கிலாந்தில் நடைபெறும் கவுண்டி டிவிஷன் 2இல் கிளாமோர்கன் அணியும் லெய்செஷ்டர்ஷைர் அணியும் விளையாடி வருகின்றன. இதில் முதல் இனிங்ஸில் லெய்செஷ்டர்ஷைர் அணி 584 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதில் முல்டர் அதிகபட்சமாக 156 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்து ஆடிய கிளாமோர்கன் அணியில் கோலின் இங்கிரம் 139 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். கிரிஷ் குகே 173 ஓட்டங்களுடனும் சாம் நார்த்தீஸ்ட் 386 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கவுண்டி கிரிக்கெட் போட்டிகளில் கிளாமோர்கன் அணி அதிகபட்ச ஓட்டங்களை குவித்து சாதனை படைத்துள்ளது. இதற்கு முன் 2000இல் 718 ஓட்டங்களை எடுத்திருந்தது. தற்போது 760 ஓட்டங்களுடன் விளையாடி வருகிறது.

சாம் நார்த்தீஷ்டும் அபாரமாக ஆடி வருகிறார். 2022 கவுண்டி கிரிக்கெட்டில் அதிகபட்ச ஓட்டங்களை அடித்தவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

# 1000 ஓட்டங்கள் கடந்தார் இந்தியாவின் ஸ்ரேயாஷ்



அன்டிகுவா, ஜூலை 25

ஒருநாள் போட்டிகளில் இந்திய வீரர் ஸ்ரேயாஷ் ஐயர் 25 இனிங்ஸில் 1000 ஓட்டங்களை கடந்து சாதனை படைத்துள்ளார்.

மே.இ.தீவுகள் அணிக்கு எதிரான வெள்ளிக்கிழமை நடந்த முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 308 ஓட்டங்களை அடித்து பிறகு 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. இதில் ஸ்ரேயாஷ் ஐயர் 54 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இதன் மூலம் இவர் ஒருநாள் போட்டிகளில் 1000 ஓட்டங்களை கடந்துள்ளார்.

இதற்குமுன் 1000 ஓட்டங்களை 24 இனிங்ஸில் விராட் கோலி, ஷிகர் தவான் கடந்துள்ளனர். அவர்களுக்கு அடுத்து நவஜோத் சிங் சித்து மற்றும் ஸ்ரேயாஷ் ஐயர் ஆகியோர் 25 இனிங்ஸில் இந்த சாதனையைப் படைத்த இந்திய வீரர்களாக உள்ளனர்.

28 ஒருநாள் போட்டிகளில் 25 இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடி 1001 ரன்களை எடுத்துள்ள ஸ்ரேயாஷ் ஐயரின் சராசரி 41.70 ஆகும். இதில் ஒரு சதம், 10 அரைசதங்களும் அடங்கும். அதிகபட்ச ஓட்டம்103.

# அயர்லாந்துடனான தொடர் நியூசிலாந்து அணி வசம்!

டாப்ளின், ஜூலை 25

அயர்லாந்துக்கு எதிரான இருபது -20 தொடரை 3-0 என்ற கணக்கில் வென்றது மிட்செல் சாண்ட்னர் தலைமையிலான நியூசிலாந்து அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 20 ஓவர்களுக்கு 174 ஓட்டங்கள் எடுத்தது. இதில், அதிகபட்சமாக போல் ஸ்டிரிங் 40 ஓட்டங்களும், மார்க் அடைர் 37 ஓட்டங்களும் எடுத்தனர்.

அடுத்து ஆடிய நியூசிலாந்து அணியில் கிளென் பிலிப்ஸ் 56 ஓட்டங்களும், டேரில் மிட்செல் 48 ஓட்டங்களும் எடுத்தனர். ஜிம்மி நீஷம் 6 பந்துகளில் 23 ஓட்டங்களை எடுத்தார். நியூசிலாந்து அணி 19 ஓவரில் 180 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

அயர்லாந்துக்கு சுற்றுபயணம் செய்துள்ள நியூசிலாந்து அணி 3ஆவது இருபது -20 போட்டியிலும் வென்றது. இதன் மூலம் 3-0 என்ற கணக்கில் தொடரை வென்றது.

ஆட்டநாயகன் மற்றும் தொடர்நாயகன் விருதுகள் கிளென் பிலிப்ஸ்க்கு வழங்கப்பட்டது. மிட்செல் சாண்ட்னர் அணித் தலைவராக இருந்த முதல் தொடரே வெற்றியில் ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளுடன் கல்கிசையில் ஜோடி கைது!

கொழும்பு, ஜூலை 25

ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 855 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஆண் மற்றும் பெண் சந்தேகநபர்கள் கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரகசிய தகவலின் பேரில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் மூலம் பெறப்பட்டதாகக் கருதப்படும் எலக்ட்ரோனிக் தராசு மற்றும் 41 ஆயிரம் ரூபாய் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதானவர்கள் 35 மற்றும் 37 வயதான அத்திடிய பிரதேசத்தை சேர்ந்தவர்கள்.

வெளிநாட்டில் வசிக்கும் ஒருவர் வட்ஸ்அப் மூலம் பூசா சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவருக்கு அறிமுகமான பெண் ஒருவருடன் சேர்ந்து போதைப் பொருள் கடத்தலை மேற்கொண்டது தெரியவந்துள்ளது. (ஐ)

# ரயில் கட்டண திருத்தம் ஊடாக பயணிகளுக்கு அநீதி ஏற்படும்!

## ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம்

**கொழும்பு, ஜூலை 25**

**ரயில் பயண கட்டண திருத்தம் ஊடாகப் பயணிகளுக்கு அநீதி இழைக்கப்படவுள்ளதாக ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரட்ன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், இதுவரை 2,860 ரூபாய்க்கு ரயில் பயண பருவ கால பற்றுச்சீட்டை பெற்று வந்த பயணிகள் அடுத்த மாதத்திலிருந்து அதனை 4,000 ரூபாய்க்கே பெற்றுக்கொள்ள முடியும்.

உண்மையில் இந்த கட்டண அதிகரிப்பானது நூற்றுக்கு நூறு சதவீதத்துக்கும் மேற்பட்ட கட்டண அதிகரிப்பாகும். நாட்டில் தற்போது பொதுப்போக்குவரத்து முடங்கியிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் பயணிகளுக்கு ரயில் போக்குவரத்து என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் ரயில் போக்குவரத்துத் துறையிலிருந்து பயணிகளை தூரப்படுத்தவே இவ்வாறான கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, இந்த கட்டண அதிகரிப்புக்கே நாம் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம். அதை விடுத்து அரசாங்கத்துக்கு வரும் வருமானத்தை தடுக்கும் நோக்கம் எமக்கு இல்லை. ரயில் பயண கட்டண அதிகரிப்பானது நியாயமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ரயில் மூலம் புகையிலை, பால் போக்குவரத்தும் முன்னெடுக்கப்பட்டது. ரயில் திணைக்களத்தில் உள்ள அதிகாரிகள் அவற்றுக்கான போக்குவரத்து கட்டணத்தை தொடர்ச்சியாக அதிகரித்ததால் ரயில்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் புகையிலை, பால் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நிலைமையே பருவகால பயணச்சீட்டுகளுக்கும் எதிர்காலத்தில் ஏற்படவுள்ளது. பயணிகள் அசௌகரியங்களின்றி ரயிலில் பயணிப்பதை இல்லாமல் செய்யும் இந்த நடவடிக்கைக்கு முற்றுமுழுதாக நாம் எமது எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

அதேபோன்று சாதாரண பயணச்சீட்டுகளுக்கான கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது. கெக்கிராவையிலிருந்து கொழும்பு கோட்டைக்கு வரும் பயணியிடமிருந்து 1300 ரூபாய் அறவிடப்படுகின்றது. கோட்டையிலிருந்து கெக்கிராவைக்கு செல்லும் பயணியிடமிருந்து 1200 ரூபாய் அறடப்படுகின்றது.

இது தற்போது நடைமுறையில் இருக்கும் தவறாகும். தொடர்ச்சியாக இவ்வாறான தவறுகள் முன்னெடுக்கப்படுவதை எம்மால் அனுமதிக்க முடியாது. இந்த கட்டண அதிகரிப் பால் பயணிகளுக்கும் ரயில் நிலைய அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் ஏற்படுவதை தடுப்பதற்காக நாம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டோம் - என்றார். (கே)

# தலைமையை தக்கவைக்கவே பெரமுன ரணிலை ஆதரித்தது

## அநுரகுமார திஸநாயக்க இப்படி விளக்கம்

கொழும்பு, ஜூலை 25

"சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து ராஜபக்ஷக்களைத் தவிர, வேறு உறுப்பினர்களுக்கு ஜனாதிபதியாகும் வாய்ப்பு வழங்கப்படமாட்டாது. ஏனெனில், அந்தக் கட்சியில் இருந்து எவராவது ஜனாதிபதியானால் அந்தக் கட்சியின் தலைமைத்துவத்தை ராஜபக்ஷக்கள் இழக்க நேரிடும். எதிர்கால ராஜபக்ஷக்களுக்காகக் கட்சியைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. அதனால்தான் "மொட்டு" கட்சி அல்லாத ஒருவரை ஜனாதிபதியாக்க "மொட்டு" கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது." - இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.



சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்ததாவது:-

"சிறீ லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களும் பிரதமர் பதவிக்கும் வரமுடியாது. அவ்வாறு வந்தாலும் அவர் "மொட்டு" கட்சித் தலைவராகிவிடுவார். அதனால்தான் மஹாஜன எக்சத் பெரமுன கட்சி தலைவரான தினேஷ் குணவர்த்தன பிரதமராக்கப்பட்டுள்ளார்.

சஜித்தை ஜனாதிபதி ஆக்கினால் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, ராஜபக்ஷக்களுக்கு எதிராக அவர் அரசியல் முகாமொன்றைக் கட்டியெழுப்பிவிடுவார். ரணிலால் அது முடியாது. அவ்வாறு செய்யவும் மாட்டார். எனவே, ரணிலை, ராஜபக்ஷக்கள் தெரிவுசெய்வதற்கு இதுவும் ஒரு காரணம்.

அதேபோல் ஊழல், மோசடிகளில் இருந்து தம்மைக் காக்கும் சிறந்த காவலன் ரணில் என ராஜபக்ஷக்கள் கருதுகின்றனர்" - என்றார். (ஐ)

# சர்வகட்சி அரசாங்கத்தில் இணைய எமக்கு அழைப்பு கிடைக்கவில்லை

## சுதந்திரக் கட்சி தலைமை அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

"சர்வகட்சி அரசாங்கத்தில் இணையுமாறு எமக்கு இன்னும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டால், அது குறித்து பரிசீலிக்கலாம்." - இவ்வாறு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினருக்கும், தொழிற்சங்க பிரமுகர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். (ஐ)

# மக்கள் மீதான அடக்குமுறைகளால் இலங்கையின் நற்பெயருக்கு பாதிப்பு

## கத்தோலிக்க ஆயர் பேரவை

கொழும்பு, ஜூலை 25

பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள்மீது அடக்குமுறைகளை பிரயோகித்து , மனித உரிமைகளை மீறும் வகையில் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகள் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கத்தோலிக்க ஆயர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட இடத்தில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூர தாக்குதல்களில் அங்கிருந்த அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களும் , இளைஞர்களும் உள்நாட்டு - வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிராயுதபாணிகளான சிவில் பிரஜைகள்மீதும், ஊடகவியலாளர்கள்மீதும் மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதல்களை கத்தோலிக்க ஆயர் பேரவை வன்மையாகக் கண்டிருக்கிறது.

கடும் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மீது இவ்வாறான அடக்கு முறைகளை பிரயோகித்து , மனித உரிமைகளை மீறும் வகையில் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகள் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு காணப்படும் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் ஜனநாயகத்தின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை கேள்விக்குட்படுத்தும். எனவே, அரசியலமைப்பில் சகல பிரஜைகளுக்கும் உரித்தாக்கப்பட்டுள்ள ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதாக வழங்கி உறுதிமொழியை மீறும் வகையில் செயற்பட வேண்டாம் என்று ஜனாதிபதியை வலியுறுத்துகின்றோம்.

இந்த மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தொடர்பில் வெளிப்படை தன்மையான விசாரணைகளை முன்னெடுப்பதோடு , அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு நாம் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# சவால்களை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு பிரிட்டன் உதவும்!

## ஜனாதிபதிக்கு பிரிட்டன் அமைச்சர் உறுதி

லண்டன், ஜூலை 25

இலங்கையின் பாதுகாப்பு, பொருளாதர நிலவரம் குறித்து பிரிட்டனின் தெற்காசிய பொதுநலவாயம் மற்றும் ஐக்கிய நாடுகளுக்கான அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் உரையாடினார்.



தனது ருவிட்டர் பதிவில் இதனை தெரிவித்துள்ள அமைச்சர் தாரிக் அஹமட் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலை தொடர்பில் அந்த நாட்டு ஜனாதிபதியுடன் ஆக்கபூர்வமான உரையாடலை மேற்கொண்டேன் என குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான ஆர்ப்பாட்டத்துக்கான உரிமை, ஊடக சுதந்திரம், மனித உரிமைகள், நீதி போன்றவை குறித்து தொலைபேசி உரையாடலில் கவனம் செலுத்தியதாக அவர் கூறினார். அத்துடன், இந்த சவால்களை இலங்கை எதிர்கொள்வதற்கு பிரிட்டன் உதவும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## கறுப்பு ஜுலை...

னது. தமிழர்களுக்கு சொந்தமான வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் அழிக்கப்பட்டன.

இலட்சக்கணக்கான மக்கள் நாட்டைவிட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டனர். கறுப்பு ஜுலை வன்முறைகளைத் தொடர்ந்து வந்த மாதங்களில் இலங்கையில் நடந்த வன்முறைகளுக்கு பதிலளிக்க கனடா அரசாங்கம் ஒரு சிறப்பு நடவடிக்கையை செயற்படுத்தியது. இது 1,800இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கனடாவில் குடியேற உதவியது. கறுப்பு ஜுலை கொடூரங்களில் இருந்து தப்பிய பல தமிழ் கனடிய மக்களை சந்திக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது.

அவர்களின் இழப்பு, இடப்பெயர்வு மற்றும் பின்னடைவு போன்ற வேதனையான அனுபவங்களால் நெகிழ்ந்து போனேன். கனடா இப்போது உலகின் மிகப்பெரிய புலம்பெயர்ந்த தமிழர்களின் புகலிடங்களில் ஒன்றாக உள்ளது. கனடாவை இன்று வலுவான, துடிப்பான மற்றும் பல்கலாசார நாடாக மாற்றுவதற்கு பெருமளவில் பங்களித்ததற்காக தமிழ் கனடியர்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவ கனடா தயாராக உள்ளது. இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் சட்டத்தின் ஆட்சியை பேணுவதற்கும் இலங்கை அரசாங்கத்தையும் இலங்கை பாராளுமன்றத்தால் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் கனடா வலுவாக ஊக்குவிக்கிறது.

இந்த இக்கட்டான காலங்களில் போராட்டக்காரர்களின் உரிமைகள் மற்றும் பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டிய தன் அவசியத்தையும் கனடா மீண்டும் வலியுறுத்துகிறது.

கறுப்பு ஜுலை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதலின் போது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருடனும் எங்கள் எண்ணங்கள் உள்ளன. அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாங்கள் ஒன்றிணைந்து செயல்பட உறுதி பூண்டுள்ளோம் - என்றுள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

என்ற இடத்தில் வைத்து தாக்கப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் யாழ். சாலையினர் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நுழையத்துக்குள் பிற இ. போ. ச. சாலையின் பேருந்துகள் நுழைய முடியாதவாறு தடுப்புகளை ஏற்படுத்தியிருந்தனர். இதனால், பிற இ. போ. சாலை பேருந்துகள் தரித்து நின்று சேவை வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அவற்றின் சேவையும் தடைப்பட்டது.

இந்நிலையில், எரிபொருள் பெறுவதற்காக யாழ். மாவட்ட செயலருடன் யாழ். மாவட்ட பிராந்திய கூட்டிணைந்த பஸ் கம்பனிகளின் இணையம் பேச்சு நடத்தியது. தனியாருக்கு எரிபொருள் வழங்குவது குறித்து முடிவு எதுவும் எடுக்கப்படாததால் இன்றைய தினம் உள்ளூர், வெளியூர் சேவைகளில் இடம்பெறாது என்று அந்த இணையத்தின் தலைவர் பொ. கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்றையதினம் வடமாகாணத்துக்கு உட்பட்ட தூர பேருந்துகளும் சேவையில் ஈடுபடாதென யாழ்ப்பாண மாவட்ட தனியார் தூர பேருந்து சங்க தலைவர் விநாயகமூர்த்தி சஜிந்தன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் இ. போ. ச. பஸ்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இந்நிலையில் இன்றைய தினம் பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளன. இந்த நிலையில், போக்குவரத்து சேவைகள் முடங்குவது மாவட்டத்தில் பெரும் பிரச்னைகளை ஏற்படுத்தும் என்று அறிய வருகின்றது. (ஐ)

## நயினாதீவில்...

நயினாதீவு பிரதேச வைத்தியசாலை பணியாளர்களின் அசமந்தமே அவரின் மரணத்துக்கு காரணம் என்று இறந்தவரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

நயினாதீவு இறங்குதுறையில் நேற்று மாலை 6.30 மணிக்கு வந்தடைந்த பயணிகள் படகில் வந்திறங்கிய குறித்த நபர், வீடு செல்லும்போது நிலைதடுமாறி வீழ்ந்து தலையில் படுகாயமடைந்தார்.

அவரை உடனடியாக நயினாதீவு பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது, அங்கிருந்த பணியாளர்கள் அவரை மருத்துவமனைக்குள் சேர்க்க மறுத்தனர். அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்று சுத்தம் செய்துவிட்டு அழைத்து வருமாறு குறிப்பிட்டனர் . இதனால், காலதாமதம் ஏற்பட்டு அந்த நபர் உயிரிழந்தார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த நபர் மதுபோதையில் இருந்தமையால், அவருக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியாமல் போனதாக மருத்துவமனை தரப்புக்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உத்தரவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## போர் குற்றவாளி...

சட்டத்தரணிகள், சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் இந்த முறைபாட்டை கையளித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்நாட்டுப் போரின்போது கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது ஜெனிவா ஒப்பந்தங்களை கடுமையாக மீறினார். இந்த மீறல்களானவை, சிங்கப்பூரின் அதிகார வரம்புக்கு உட்பட்ட குற்றங்களாகும்.

இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது ஜெனிவா உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டங்களை கோட்டாபய ராஜபக்ஷ கடுமையாக மீறினார். இதில் கொலை, மரண தண்டனை, சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற சித்திரவதை, பாலியல் வன்புணர்வு மற்றும் பிற பாலியல் வன்முறைகள், சுதந்திரத்தை பறித்தல், கடுமையான உடல் மற்றும் மனநல பாதிப்பு மற்றும் பட்டினி ஆகியவை அடங்கும் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வரவு...

அபிவிருத்தி வங்கியும் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக அண்மையில் அறிவித்துள்ளது. அந்த நிறுவனங்கள் ஏற்கனவே இலங்கைக்கு எரிவாயு விநியோகம் செய்வதற்கும் நிதி உதவி வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## ரணிலை...

சில விடயங்களை நடைமுறைப்படுத்தக் கேட்டிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கைதிகள் தொடர்பான தகவல்களுடன் தம்மை சந்திக்குமாறு கேட்டிருந்தார். இதையடுத்து, நேற்றைய தினம் அரசியல் கைதிகளின் உறவினர்கள் அவரை சந்தித்து அது தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளனர். (ஐ)

# ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, ஜுலை 25

முரண்பாடற்ற வகையில் ரயில் கட்டணத்தை திருத்தம் செய்யுமாறு போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ரயில் திணைக்கள பொது முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கியதை தொடர்ந்து ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை கைவிட்டனர்.

புதிய ரயில் கட்டண திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தினர் நேற்று முன்தினம் மாலை 6 மணிமுதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுப்பட்டனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்பு தொடர்பில் ரயில் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தில் நேற்று காலை போக்குவரத்து அமைச்சின் செயலளார், புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் மற்றும் ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் பங்குப்பற்றலுடன் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பு தொடர்பில் ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவிக்கையில்,

ரயில் கட்டண திருத்தத்தை 60 சதவீதமளவில் முன்னெடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளநிலையில், வழங்கப்பட்ட கட்டண திருத்தம் நூற்றுக்கு நூறு வீதமளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டண திருத்தத்தை செயல்படுத்தினால் பயணிகளுக்கும், ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படும் என்ற காரணத்தினால் கட்டண திருத்தத்தை செயற்படுத்த போவதில்லை என தீர்மானித்தோம்.

புதிய கட்டண திருத்தத்தை செயற்படுத்தாத காரணத்தினால் எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுப்பதாக ரயில் திணைக்கள பொது முகாமையாளர் அறிவித்த காரணத்தினால் பணி புறக்கணிப்பில் ஈடுப்பட்டோம்.

போக்குவரத்து அமைச்சின் செயலாளருடனான பேச்சு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கட்டண திருத்தம் முறையற்றது என்பது தெளிவுப்படுத்தப்பட்டது. முரண்பாடற்ற வகையில் கட்டண திருத்தம் செய்யுமாறு செயலாளர் வழங்கிய ஆலோசனையை தொடர்ந்து போராட்டத்தை கைவிட்டுள்ளோம்.

ரயில் சேவையை இலாபமடைய செய்ய வேண்டும் என்பதற்காக பொது பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்க முடியாது. ரயில் சேவையை இலாபமடைய செய்யும் திட்டங்களை ஏற்கெனவே முன்வைத்துள்ளோம்.அவற்றை செயற்படுத்த ரயில் திணைக்களம் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை என்றார்.

# ரணில் ஜனாதிபதியானமையை விருந்திட்டு கொண்டாடிய நாமல்!

கொழும்பு, ஜுலை 25

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதையடுத்து நாமல் ராஜபக்ஷ விருந்து வைத்து கொண்டாடினார் என்று தென்னிலங்கை தகவல்கள் கூறுகின்றன.

இந்த விருந்து, ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட அன்றைய தினம் இரவு பண்டாரநாயக்க நினைவு மாநாட்டு மண்டபம் அருகிலுள்ள நாமலின் வீட்டில் இடம்பெற்றது.

இந்த விருந்துக்கு பொதுஜன பெரமுனவில் உள்ள அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதில், அந்தக் கட்சியை சேர்ந்த 135 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் டலஸ் அழகப்பெருமவுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்திருந்த பிரேமநாத் தொலவத்து எம். பியும் பங்கேற்றிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷவும் இரவு விருந்தில் பங்கேற்றிருந்தார். அதிகாலை 3 மணி வரை தொடர்ந்த இந்த விருந்தில், பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பாடல்களை பாடிக் கொண்டாடினர். (சி)

# சிபெற்கோவின் முடிவால் விநியோகத்தில் சிக்கல்!

கொழும்பு, ஜுலை 25

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபெற்கோ) நாளாந்த எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்துவதற்கு எடுத்த தீர்மானத்தால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கொண்டு செல்லும் பௌசர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தனியார் எரிபொருள் பௌசர் உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் முற்பதிவு செய்யப்பட்ட எரிபொருட்களை உரிய நேரத்தில் வழங்குவது குறித்து கேள்வி எழுந்துள்ளது.

நாளாந்தம் 3,000 மெற்றிக்தொன் பெற்றோல் மற்றும் 4,000 மெற்றிக் தொன் டீசலை விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. ஆனால், அனைத்து நிரப்பு நிலையங்களிலும் எரிபொருள் கிடைக்குமா என்ற கவலை நிலவுவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் அடுத்த 30 நாட்களுக்கு போதுமான டீசல் கையிருப்பில் உள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், 22 நாட்களுக்கு போதுமான பெற்றோலும் இருப்பில் உள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எனக்கு எதிராக...

பிரதான காரணம். அதன்படி இது தனக்கு பாதகமானது என்பதை ரணில் உடனடியாக உணர்ந்து, அதைச் சரிபார்க்க, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெயசங்கருடன் தொலைபேசியில் பேசினார் என்று அறிய வருகின்றது.

தமிழக அரசியல் கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை நிலைமை குறித்து ஆலோசிக்க இந்தியா ஏற்கனவே அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டியிருந்த நிலையில், ரணில் முதலில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருடன் கலந்துரையாடி, இந்த விவகாரம் குறித்து நேரில் பேச விரும்பினார்.

இதையடுத்து, இந்திய வெளியுறவு துறை அமைச்சரின் பணிப்பின் பேரில், இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே ரணிலை நேரில் சந்தித்து பேசியுள்ளார். அத்துடன், இலங்கையின் அரசியல் விவகாரங்களில் இந்திய அரசு தலையிடாது என்றும் அவர் இதன்போது கூறினார். (சி)

ஈழநாடு
Eelanadu

# அரச ஊழியரின் சுழற்சிமுறை கடமை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பு!

கொழும்பு, ஜூலை 25

**நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்தில் கொண்டு, அரச அலுவலகங்களுக்கு ஊழியர்களை அழைப்பதை கட்டுப்படுத்தி பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை நேற்று முதல் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.**

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், அமைச்சுச் செயலாளர்கள் - மாகாண தலைமைச் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கையின் விதிகள், அத்தியாவசிய பொது சேவைகளை பராமரிக்க தேவையான பணியாளர்களை இணையவழியில் செய்ய முடியாத கடமைகளுக்கு அழைப்பதை தடுக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# குரங்கு அம்மை நோய்; இலங்கை அவதானம்!

*சுகாதார சேவைகள் திணைக்களம்*



கொழும்பு, ஜூலை 25

இலங்கையும் குரங்கு அம்மை தொடர்பில் மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டு மக்களை நோயிலிருந்து பாதுகாக்கும் முறையான வேலைத்திட்டம் ஏற்கனவே நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

குரங்கு அம்மை உலக சுகாதார அவசரநிலையாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இதனை அறிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி, உலகில் 75 நாடுகளில் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் இருந்து பெரும்பாலும் பதிவாகிய குரங்கு காய்ச்சல், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் பதிவாகியுள்ளன. இந்த நோயால் இதுவரை 5 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எரிபொருளுக்காக பொலிஸார்மீது தாக்குதல் நடத்திய இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 25

பொலிஸாரை தாக்கிவிட்டு எரிபொருளை பெற முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவங்கள் குறித்து அறிய வருவதாவது,

குருநாகல் - கோனகம எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதுபோதையில் வந்த குறித்த நபர் தனது மோட்டார் சைக்கிளுக்கு பலவந்தமாக எரிபொருள் பெற்றுக்கொள்ள முயற்சி செய்துள்ளார். இதன்போது தடுக்கவந்த பொலிஸாரை தாக்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் பதில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பின்னர் 40 வயதான குறித்த சந்தேகநபர் வாரியபொல மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பிலியந்தலை - மடபாத பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளுக்காக இரு தடவைகள் எரிபொருளை பெற்றுக் கொள்ள குறித்த சந்தேகநபர் முயற்சித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் 43 வய தான சந்தேக நபர் ஒருவரே பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# போராட்டக்காரர்கள்மீதான தாக்குதல் சர்வதேச நீதிமன்றில் முறையிட முடிவு

கொழும்பு, ஜூலை 25

காலிமுகத்திடல் போராட்டக் காரர்கள்மீது படையினர் நடத்திய தாக்குதல் தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் ஜெனிவா மனித உரிமைகள் ஆணையத்தில் முறையிட போராட்டக்காரர்கள் முடிவு செய்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

பல ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள்மீதான தாக்குதல்கள் தொடர்பில் அந்தந்த அமைப்புகள் தனித்தனியாக முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளன.

இந்நிலையில், கோட்டா கோ கம கிராமத்தை விட்டு வெளியேறுவதில்லை என்றும் அதனை தொடர்ந்து பேணவும் போராட்டக் காரர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முடிவு செய்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. (சி)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 - 10 - 1971 | 18 - 07 - 2022 |

### நவரட்ணராஜா நவரட்ணம்

கிளிநொச்சி பளையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Stuttgart ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணராஜா நவரட்ணம் அவர்கள் 18.07.2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், தம்பிள்ளை நவரட்ணம் சோதிமலர் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஜெயரட்ணம் ராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும்,அகல்யா அவர்களின் அன்புக் கணவரும்,ஸ்ரெபானி, சயந்தன், யஸ்மின் ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ், ரஞ்சி, மகா, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகன்யா அவர்களின் பாசமிகு அத்தானும்,ரோஏஸ், கோப், ராசாத்தி, ரகுநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

நல்லடக்கம்
Wednesday, 27 Jul 2022 10:00 AM - 12:30 PM
Pragfriedhof Stuttgart Friedhofstraße 44, 70191 Stuttgart, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**அகல்யா நவரட்ணராஜா - மனைவி** Mobile : +491725978158
**சதீஸ் - சகோதரன்** Mobile : +4915211608534

# சிங்கப்பூரிலிருந்து ரணிலுக்காக ஆதரவு திரட்டினார் கோட்டாபய!

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமங்கவைத் தெரிவு செய்வதற்காக தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆதரவு திரட்டினார் என்று அவரின் கட்சி வட்டாரங்கள் கூறின.

சிங்கப்பூரில் இருந்து ரணிலுக்கு ஆதரவு வேட்டையை தொடங்கிய கோட்டாபய ராஜபக்ஷ, தன்னோடு அரசியலை தொடங்கி பாராளுமன்றம் வந்தவர்களுடன் தனிப்பட்ட ரீதியில் உரையாடினார்.

தனது வெற்றிக்காக உருவாக்கப்பட்ட "வியத்மக" அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு வந்திருந்த நாலக கொடஹேவா, சன்ன ஜயசுமண போன்ற உறுப்பினர்கள்கூட டலஸுக்கு ஆதரவளிப்பதாக நேரடியாக அறிவித்திருந்தனர். இதனை சிங்கப்பூரில் இருந்த கோட்டாவும் அறிந்து கொண்டார்.

இதையடுத்து அவர்கள் அனைவரிடமும் தனிப்பட்ட முறையில் பேசி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்குமாறு கோட்டாபய ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# கடையில் கைவரிசை காட்டிய திருடன் மக்களிடம் சிக்கினான்!

கிளிநொச்சி, ஜூலை 25

கிளிநொச்சி உதயநகர் பகு தியில் வயோதிபரின் கடையில் திருட்டில் ஈடுபட்ட நபரை உதயநகர் பகுதி மக்கள் மடக் கிப் பிடித்தனர்.

அந்தக் கட வயோதிப பெண்ணிடம் குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வந்து தரு மாறு கேட்டுள்ளார்.

அவர் தண்ணீர் எடுத்து வரு வதற்காக உள்ளே சென்ற போது கடையின் அலுமாரிக்குள் இருந்த பணத்தை திருடிக் கொண்டு ஓடிய வேளை குறித்த நபர் மக்களால் விரட்டி பிடிக் கப்பட்டுள்ளார். (ஐ)

# ரணிலுக்காக டலஸிடம் பேரம்பேசினார் நாமல்?

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட டலஸ் அழகப்பெருமவிடம் நாமல் ராஜபக்ஷ பேரம் பேசினார் என்று தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் பெரும் பிரச்னை எழுந்தபோது நாமல் ராஜபக்ஷ இதில் தலையிட்டு டலஸ் அழகப்பெருமவிடம் திட்டம் ஒன்றை கூறினார்.

இதன்போது, ரணில் நிச்சயம் அரச ஜனாதிபதியாக வருவார் என்றும், அதன் பின்னர் 19 ஆவது திருத்தச் சட்டம் போன்ற அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் எனவும், அதன் பின்னர் பிரதமர் பதவி டலஸுக்கு வழங்கப்படும எனவும் பேரம் பேசப்பட்டது. அத்துடன், பிரதமர் பதவிக்குரிய அதிகாரங்கள் பிரதமருக்கே வழங்கப்படும் எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

ஆனால், நாமல் ராஜபக்ஷ முன்வைத்த இந்தத் திட்டத்தில் டலஸ் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை. இதன் பின்னரே, பொதுஜன பெரமுன உறுப்பினர்களிடம் ரணிலுக்கு வாக்களிக்குமாறு கோரி நாமல் தொலைபேசியில் அழைப்பு விடுக்க தொடங்கினார்.

ஆனால், நாமலின் தொலைபேசி அழைப்புக்களுக்கு பல மூத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், தொடர்ந்து மூத்த உறுப்பினர்களுக்கு நாமலால் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ள முடியவில்லை.

இதேபோன்று அழைப்புக்களை மேற்கொள்ள வேண்டாம் என்று பல பாராளுமன்ற உறுப்பினர்கள் நாமல் தொடர்பாக மூத்த உறுப்பினர்களிடம் முறையிட்டிருந்தனர் என்றும் கூறப்பட்டது. (சி)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.